மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)
தொலைநிலைக் கல்வி

பி.லிட்., தமிழ்

மூன்றாமாண்டு

தாள் : 6

மொழி பெயர்ப்பியல்

DEC அங்கீகாரம்பெற்றது

www.mkudde.org

S2817

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி

SAI GRAPHS - SVKS - 2018 - C/200

அன்புள்ள மாணவச் செல்வங்களே,

வணக்கம்!

பி.லிட். மூன்றாம் ஆண்டில் சேர்ந்து தமிழ் இலக்கியம் பயில வந்துள்ள உங்களை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தொலைநிலைக் கல்வித் தமிழ்த்துறை அன்போடு வரவேற்கிறது. இந்த ஆண்டு நீங்கள் ஏழு தாள்கள் படிப்பீர்கள். மூன்றாமாண்டில் சுற்றுச்சூழலியல் என்னும் பாடம் அனைத்துப் பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் பொதுவான பாடமாகும்.

இந்த ஆண்டில் நீங்கள் படிக்க வேண்டிய பாடங்கள் ஏழு. அவை பின்வருமாறு :

தாள் 1.	பண்டை இலக்கியம்
தாள் 2.	நீதி இலக்கியம்
தாள் 3.	இலக்கணம் – 5 : தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்
தாள் 4.	இலக்கணம் – 6 : தொல்காப்பியம் – சொல்லதிகாரம்
தாள் 5.	இலக்கணம் – 7 : தொல்காப்பியம் – பொருளதிகாரம்
தாள் 6.	மொழிபெயர்ப்பியல்
தாள் 7.	சுற்றுச்சூழலியல்

உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களை நன்கு படியுங்கள். நீங்கள் தானாகவே படித்துப் புரிந்து கொள்ளும் வகையிலேயே பாடங்கள் எளிமையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. பாடங்களில் உள்ள தன்மதிப்பீட்டு வினாக்களுக்கும், பயிற்சி வினாக்களுக்கும் விடை எழுதிப் பயிலுங்கள். படிக்கும் போது ஐயங்கள் தோன்றின் ஐயத்தைத் தொடர்பு வகுப்புகளில் உங்களுக்குப் பாடம் நடத்த வரும் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெறலாம். நன்கு படித்துத் தேர்வில் வெற்றி பெற வாழ்த்துகிறோம். தொடர்பு வகுப்புகளுக்குத் தவறாது வந்து படித்துப் பயன்பெறுக.

பி.லிட்., (தமிழ்) மூன்றாமாண்டு

தாள் 6 : மொழி பெயர்ப்பியல்

பாடத்திட்டம்

கூறு 1 : மொழிபெயர்ப்பு – விளக்கம் – மொழி பெயர்ப்பு வரலாறு ஒரு பார்வை

கூறு 2 : மொழி பெயர்ப்பின் தேவை – மூல மொழியும் குறிக்கோள் மொழியும் – மொழி பெயர்ப்பு நிகரன்கள்

கூறு 3 : மொழி வழக்குகளும் மொழி பெயர்ப்பும் – இலக்கணத்தைத் தகவுற அமைத்தல்

கூறு 4 : பொருளைப் பொருத்தமுற அமைத்தல் – சொல்லாக்கம்

கூறு 5 : மொழி பெயர்ப்பின் மூன்று படி நிலைகள் – மொழி பெயர்ப்பாளன் – மொழி பெயர்ப்பியல் கோட்பாடுகள்.

உள்ளடக்கம்

பக்கம்

அலகு 1 : மொழிபெயர்ப்பு – விளக்கம் – மொழி பெயர்ப்பு வரலாறு ஒரு பார்வை 5

அலகு 2 : மொழி பெயர்ப்பின் தேவை – மூல மொழியும் பெறும் மொழியும் – மொழி பெயர்ப்பு நிகரன்கள் 12

அலகு 3 : மொழி வழக்குகளும் மொழிபெயர்ப்பும் – இலக்கணத்தைத் தகவுற அமைத்தல் 22

அலகு 4 : பொருளைப் பொருத்தமுற அமைத்தல் – சொல்லாக்கம் 56

அலகு 5 : மொழி பெயர்ப்பின் மூன்று படி நிலைகள் – மொழி பெயர்ப்பாளன் – மொழி பெயர்ப்பியல் கோட்பாடுகள். 80

அலகு 1 : மொழிபெயர்ப்பு - விளக்கம் மொழிபெயர்ப்பு வரலாறு - ஒரு பார்வை

அறிமுகம் 1 :

மொழிபெயர்ப்பு என்றால் என்ன? என்பதனையும், மொழிபெயர்ப்பின் வரலாற்றையும் விளக்குவதாக இப்பாடம் அமைகிறது.

நோக்கம் :

1. மொழிபெயர்ப்பு என்பதன் செயல் முறையினை அறிதல்.
2. உலகளாவிய நிலையிலும், தமிழிலும் மொழிபெயர்ப்பு வரலாற்றினை அறிதல்.

பாட அமைப்பு

1.1 : மொழிபெயர்ப்பு விளக்கம்

1.1.1 : மொழி பெயர்ப்பின் வரைவிலக்கணம்

1.1.2 : மூல மொழியும் – பெறும் மொழியும்

1.2 : மொழிபெயர்ப்பு வரலாறு – ஒரு பார்வை

1.2.1 : மொழிபெயர்ப்பு எப்போது தோன்றியது?

1.2.2 : உலக மொழிகளில் மொழிபெயர்ப்பு

1.2.3 : தமிழில் மொழிபெயர்ப்பு வரலாறு

1.2.3.1 : மொழிபெயர்ப்பு அறிவின் தொன்மை

1.2.3.2 : சமயத்தாக்கம்

1.2.3.3 : நிறுவனங்களின் பங்கேற்பு

1.2.3.4 : இதழ்கள், தொலைக்காட்சி

1.2.3.5 : கணினி மொழிபெயர்ப்பு

1.3 : தன்மதிப்பீட்டு வினா விடைக்குறிப்பு

1.4 : தொகுப்புரை

1.5 : கலைச்சொற்கள்

1.6 : பயிற்சி வினாக்கள்

1.1 மொழி பெயர்ப்பு - விளக்கம்

1.1.1. மொழிபெயர்ப்பின் வரைவிலக்கணம்

தன்மதிப்பீட்டு வினா 1

மொழிபெயர்ப்பை ஜே.சி. காட்போர்டு எப்படி விளக்குகிறார்?

மூல மொழியிலுள்ள ஒரு செய்தியை அதற்கு நிகரான பெறும்மொழிச் செய்தியாகப் பெயர்ப்பதே மொழிபெயர்ப்பு என்பார் ஜே.சி.காட்போர்டு என்பார்.

மூலத்துக்கு இணையான பெறும்மொழி நிகரனைக் (equivalant) கண்டறியும் செயல்முறையே மொழிபெயர்ப்பு என்பார் ஜசடோர் பிஞ்சக்.

தன்மதிப்பீட்டு வினா 2

மொழிபெயர்ப்பின் பணியாக டாஸ்டர்ட் கூறுவது யாது?

ஒரு பாங்கமைவில் (Pattern) அமைந்த குறியீட்டுத் தொகுதியின் பொருளை இன்னொரு பாங்கமைவில் அமைந்த குறியீட்டுத் தொகுதியாக மாற்றுவதே மொழிபெயர்ப்பின் பணியாகும் என்பார் டாஸ்டர்ட். பொருளுக்கு முதலிடமும் நடைக்கு இரண்டாமிடமும் தரும் வகையில் மூலமொழிச் செய்திக்கு மிக நெருங்கிய இயல்பான நிகரனைப் பெறும் மொழியில் தருவதே மொழிபெயர்ப்பு என்பார் நைடா.

1.1.2 மூலமொழியும் பெறும் மொழியும்.

தன்மதிப்பீட்டு வினா 3

மூலமொழி பெறு மொழி இவற்றை விளக்குக.

மொழிபெயர்ப்பு என்னும் செயல்முறையில் ஒரு சமயத்தில் இரண்டு மொழிகள் (மட்டும்) சம்பந்தப்படுகின்றன. அதாவது இரண்டு மொழிகளின் மொழியியற் கூறுகள், சொற்களஞ்சியம், அம்மொழிகளைப் பேசுவோரின் கலாச்சாரம், வரலாறு, வாழ்வுச் சூழல், வாழிடத்தின் புவியியல் அமைப்பு, தட்பவெப்ப நிலை ஆகியவை சம்பந்தப்படுகின்றன.

அவ்விரண்டு மொழிகளுள் ஒன்று மூலமொழி (Source Language); இன்னொன்று பெறும் மொழி (Receptor Language), இவை முறையே மூ.மொ (SL) பெ.மொ (RL) என்ற சுருக்கக் குறியீடுகளால் பெறப் படுகின்றன.

1.2. மொழிபெயர்ப்பு வரலாறு - ஒரு பார்வை

1.2.1. மொழி பெயர்ப்பு எப்போது தோன்றியது?

ஒரு வகையில் பார்த்தால், மொழி என்பதே ஒன்றை இன்னொன்றில் பெயர்த்துத் தருவதுதான். அதாவது, நமது அனுபவங்கள், எண்ணங்கள், கருத்துக்கள், உணர்வுகள், தேவைகள், ஆசைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை நாம் அறிந்த மொழியில் வாய்மொழியாகவோ, எழுத்துமொழியாகவோ பெயர்த்துத் தருகிறோம். ஆக, மொழியின் பயன்பாட்டில் பெயர்த்தல் அல்லது மாற்றுதல் (Transfer) நிகழ்கிறது.

ஒரு குழுவினர் தம் கருத்துக்களையும், அனுபவங்களையும் ஒரு வகைக் (Set) குறியீடுகளால் உணர்த்துகின்றனர். இன்னொரு குழுவினர் அதே கருத்துக்களையும் அனுபவங்களையும் இன்னொரு வகைக் குறியீடுகளால் உணர்த்துகின்றனர். வர்த்தகப் பரிமாற்றம் தொடங்கிச் சமயம், அரசியல், அறிவியல் பரிமாற்றம் வரை மேற்கூறிய இருகுழுவினர்க்கும் மொழிபெயர்ப்பு என்பது அடிப்படைத் தேவையாகிறது. ஒரு குழந்தையின் மழலை தாய்க்குப் புரியும். மற்றவர்களுக்கு அவள் அதைப் பெயர்த்துத் தருகிறாள். இதுவும் ஒரு வகை மொழிபெயர்ப்புத் தான். ஆக, மொழிபெயர்ப்பு என்பது எங்கேயோ எப்போதோ தொடங்கிவிட்டது. இன்றும் அன்றாடம் தொடர்கிறது.

1.2.2. உலக மொழிகளில் மொழிபெயர்ப்பு

"மொழிபெயர்ப்பு என்பது இல்லாமல் உலக வரலாறே இல்லை" என்பார் எல்.ஜி.கெல்லி.

தன்மதிப்பீட்டு வினா 4

உலகளவில் தோன்றிய முதல் மொழிபெயர்ப்பு எது?

யூதர்களின் மொழியாகிய எபிரேயத்திலிருந்து கிரேக்கத்திற்கு மொழி பெயர்க்கப்பட்ட யூத வேத நூலே மேற்கு நாடுகளின் முதல் வரிவடிவ மொழி பெயர்ப்பாகும். இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அலெக்ஸாண்ரியாவில் தோன்றியது. ஆசியாவில் கி.மு.4ஆம் நூற்றாண்டு தொடங்கி ஓர் ஆயிரம் ஆண்டுகளாகப் புத்தரின் போதனைகள் சீனம் முதற்கொண்டு பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டன. அடுத்து, கிரேக்கத்தைக் கைப்பற்றிய அரேபியர்கள் கிரேக்க மொழியின் தத்துவ, அறிவியல் நூல்களை அரேபிய மொழியில் பெயர்த்தனர். இடைக்காலத்தில் இந்த அரேபிய மொழி பெயர்ப்புக்களிலிருந்து லத்தீன் மொழிபெயர்ப்புகள் தோன்றின. இவையே ஐரோப்பியர்களின் அறிவியல் முன்னேற்றத்திற்கு அடிகோலின.

தன்மதிப்பீட்டு வினா 5

பைபிளின் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பு எது?

பைபிளின் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பு 1382இல் வெளிவந்த விக்லிப் பைபிள் ஆகும். அடுத்தடுத்து ஆங்கிலத்தில் கலை, இலக்கிய, அறிவியல் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. மறுமலர்ச்சிக் காலம் (Renaissance) தொடங்கி எண்ணற்ற அறிவியல் நூல்கள், அவை தோன்றிய மொழியிலிருந்து பிற மொழிகளில் பெயர்க்கப்பட்டன. இது ஒரு தொடக்க நிகழ்வாக அமைந்து அறிவியல் செய்திகள் விரைவாகப் பரவுவதற்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் பரவலாக வளர்வதற்கும் வித்திட்டது. பின்னாளில் மொழிபெயர்ப்பு என்பது ஒரு முறைப்படுத்தப்பட்ட தனித்துறையாக வளர்ந்தது.

1.2.3. தமிழில் மொழிபெயர்ப்பு வரலாறு

1.2.3.1. மொழிபெயர்ப்பு அறிவின் தொண்மை

இரு மொழிகளுக்குள் பரிமாற்றம் நிகழும் போது, முதலில் ஊடுருவுவன சொற்களே. அப்படித்தான் வட சொற்களும், மேற்கத்திய மொழிச் சொற்களும் தமிழில் ஊடுருவின; தமிழ்ச் சொற்களும் மேற்படி மொழிகளில் இடம்பிடித்தன. தொல்காப்பியமும் சொற்களை வகைப்படுத்தும் போது

> "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (தொல். 880)

என்று வகைப்படுத்தினார். வேற்று மொழிச் சொற்கள் தமிழில் இடம்பெறும் போது, தமிழ்மொழியின் ஒலிமரபும், இயல்புத் தன்மையும் மாறாமல் பெயர்க்கப்பட வேண்டும் என்பதில் அவர் கவனமாயிருந்தார். இன்றைக்கு உலகப் புகழ் பெற்ற மொழிபெயர்ப்பியல் அறிஞரும் அதே கருத்துடையவர் என்பது இங்கு அறிந்து இன்புற வேண்டிய ஒன்று.

> வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (தொல். 884)

தன்மதிப்பீட்டு வினா 6

தொல்காப்பியர் மொழிபெயர்ப்பினைக் குறித்து கூறுவது யாது?

என்பது தொல்காப்பியம்.

கி.மு. 4ஆம் நூற்றாண்டு அளவிலேயே மொழிபெயர்ப்பினை ஓர் இலக்கிய வகையாகக் கூறிய பெருமை தமிழனைச் சேரும் என்பதனை,

> தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
> அதர்ப்பட யாத்தலொடு அனைமரபினவே (தொல் 1597)

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்தும்.

1.2.3.2. சமயத் தாக்கம்

தன்மதிப்பீட்டு வினா 7

தமிழில் தோன்றிய முதல் மொழி பெயர்ப்பு நூல் எது?

வடமொழியின் ஆரிடம் என்ற வாழ்நெறி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகிய பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக் கோவையே தமிழின் முதல் மொழிபெயர்ப்பு நூல் என்பர். இது சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்தது. கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரையிலான இடைக்காலத்தில் தமிழில் தோன்றிய மொழிபெயர்ப்புகளுக்குச் சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகிய சமயங்களே தளமாய் அமைந்தன. அவ்வகையில் கொங்குவேளிரின் பெருங்கதை, சீவக சிந்தாமணி, குளாமணி, யசோதர காவியம், மேரு மந்திர புராணம், வளையாபதி, அருங்கலச் செப்பு ஆகிய சமண நூல்களும் குண்டலகேசி போன்ற

பௌத்த நூல்களும் கம்ப ராமாயணம், அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை, காகுத்தன் கதை ஆகிய இராமகதை சார்ந்த நூல்களும், பெருந்தேவனாரின் பாரதம், வில்லிபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், புகழேந்தியின் நளவெண்பா ஆகிய பாரதம் சார்ந்த நூல்களும் குறிப்பிடத்தக்கவை. இவை அனைத்தும் வழிநூல்களாகவும், தழுவல்களாகவும் அமைந்துள்ளன.

கிறித்துவ திருமறை நூலான பைபிள் இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் முதன் முதலில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது ஜீகன் பால்கு ஐயரின் மொழிப்பெயர்ப்பாகும் (1711). பெப்ரீஷியஸின் பைபிள் மொழிபெயர்ப்பும் (1774) குறிப்பிடத்தக்கது.

தன்மதிப்பீட்டு வினா 8

இந்திய மொழிகளில் எந்த மொழியில் பைபிள் முதன் முதலில் மொழி பெயர்க்கப்பட்டது?

பிற்காலத்தில் மேல்நாட்டுப் புதுவகை உரைநடை இலக்கியங்களான நாவல், சிறுகதைகளம், ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் தமிழ் ஆர்வலரின் வாயிலாகப் பரவலாகத் தமிழுக்கு வந்து சேர்ந்தன. வரலாறு, வணிகம், அரசியல், புவியியல், அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமிழுக்கு வந்த புது வரவுகளில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் பங்கு பெரிது.

1.2.3.3. நிறுவனங்களின் பங்களிப்பு

தேசிய அளவில் மொழிதோறும் எழுந்த செம்மை நூல்களைப் பிற தேசிய மொழிகளில் மொழிபெயர்த்துப் பரப்பும் பணியினை சாகித்திய அக்காதமி தேசிய இலக்கிய கழகமும் (தோற்றம் 1954), நேஷனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியா என்ற தேசிய நிறுவனமும் (தோற்றம் 1957) தேர்ந்த திட்டங்களாகச் (Chosen Projects) செயற்படுத்தி வருகின்றன.

தமிழ் இலக்கிய இலக்கணங்களை உலக மொழிகளில் தருவதில் பெரும் முனைப்பு காட்டிய பெருமை ஆசியாவியல் நிறுவனத்தை (Institute of Asian Studies) சேரும். இந்நிறுவனத்தின் மூலம் தொல்காப்பியமும் பரிபாடலும் ஆங்கில ஆக்கம் பெற்றுள்ளன. பழந்தமிழ்க் கவிதைகளிலிருந்து தற்காலக் கவிதைகள் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் Tamil Poetry Through Ages என்ற தொகுதியாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்கோவையார், பெரியபுராணம், பாரதியார் கவிதைகள் ஆகிய தமிழ் இலக்கியங்களை தமிழ்ப்பல்கலைக்கழகம் (தோற்றம் 1981) ஆங்கிலத்தில் பெயர்த்து வெளியிட்டுள்ளது. நடுவணரசின் செம்மொழித் தமிழ் நிறுவனமும் தமிழர் சிந்தனைகளை உலக மொழிகளில் மாற்றித் தருவதில் பெரும்பணி ஆற்றி வருகிறது.

"இதுவரை சுமார் 50 மொழிகளின் 5000க்கும் மேற்பட்ட நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன" என்பார் முனைவர் ச. சிவகாமி அவர்கள். திருக்குறள் முதலான பல்வேறு தமிழ் நூல்கள் ஆங்கிலம், பிரஞ்ச், போர்ச்சுகீசியம் போன்ற உலக மொழிகளில் பெயர்க்கப்பட்டு பேணப்படுவதற்குத் தொடக்கத்தில் கிறித்துவ சமய ஆர்வலர்களே காரணமாயிருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும் சமயம் சாராத நூல்களுள் திருக்குறளே அதிக உலக மொழிகளில் வெளிவந்து பைபிள் குரான் ஆகியவற்றை அடுத்து மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது என்பதும் நமக்கு மகிழ்வளிப்பதாகும். ஆனாலும் இன்னும் பயணிக்க வேண்டிய தூரம் அதிகம்.

1.2.3.4. இதழ்கள், தொலைக்காட்சி

இன்று செய்திகளைத் தமிழில் தருவதில் தமிழ் நாளிதழ்களும், இதழ்களும் பெரும்பங்காற்றி வருகின்றன. பல்வேறு மொழித் திரைப்படங்களைத் தமிழில் சுவை ததும்பப் பெயர்த்து ஒளிபரப்பி, மொழி பெயர்ப்புக் களத்தில் பெருஞ்சாதனை புரிந்து வரும் தொலைக்காட்சி நிறுவனங்களும் தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் குறிப்பிட்ட இடத்தைப் பெறுகின்றன.

கணினி மொழிபெயர்ப்பு (Machine Translation)

மொழிபெயர்ப்பு வரலாற்றில் கணினி மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்கது. ஒரு மொழியின் குறியீடுகளைக் கணிணியின் செயல்முறைக்கு ஏற்ற வடிவத்தில் மாற்றி, அவற்றை ஒரு கணிணியின் செயல்முறைக்குட்படுத்தி அவற்றின் பெறும்மொழி நிகரன்களைப் பெறுவதே கணிணி மொழிபெயர்ப்பாகும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளில் முதன்முறையாகக் கணிணி மொழிபெயர்ப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அதைப்பற்றி ஓர் ஒளிமயமான எதிர்காலம் மக்கள் மனத்தில் விரிந்தது. கணினியிடத்துத் தன்னாக்கத் திறனையோ (Originality) ஆக்கத்திறனையோ (Creativity) கற்பனையையோ, சமயோசிதத்தையோ எதிர்பார்க்க முடியாது. ஆனால் மொழிபெயர்ப்பில் செயற்பாடு மிகுதி. அதனால் இன்று கணினிகள் மொழிபெயர்ப்பில் மனிதர்களுக்கு உதவியாகப் பயன்படுகின்றனவே அல்லாமல் அவர்களுக்குப் பதிலியாகக் கருதப்படவில்லை.

1.3 தன்மதிப்பீட்டு வினா விடைக்குறிப்பு

வினா 1 பகுதி 1.1.1. ஐப்பார்க்க

வினா 2 பகுதி 1.1.1. ஐப்பார்க்க

வினா 3 பகுதி 1.1.2. ஐப்பார்க்க

வினா 4 பகுதி 1.2.2. ஐப்பார்க்க

வினா 5 பகுதி 1.2.2 ஐப்பார்க்க

வினா 6 பகுதி 1.2.3.1 ஐப்பார்க்க

வினா 7 பகுதி 1.2.3.2. ஐப்பார்க்க

வினா 8 பகுதி 1.2.3.2. ஐப்பார்க்க

1.4 தொகுப்புரை :

இந்தப்பாடத்தில் மொழிபெயர்ப்பு என்றால் என்ன? என்பது குறித்து அறிந்து கொண்டோம். உலக அளவிலுமத், தமிழிலும் மொழிபெயர்ப்பின் வரலாற்றைத் தெரிந்து கொண்டோம்.

1.5. இந்தப் பாடத்தில் நாம் தெரிந்து கொண்ட கலைச்சொற்கள் பின் வருமாறு :

மூலமொழி – Source Language

பெறும் மொழி – Receptor Language

கணினி மொழிபெயர்ப்பு – Machine Translation

1.6 பயிற்சி வினாக்கள் :

சிறு வினா :

1. மொழிபெயர்ப்பு என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

2. மொழி பெயர்ப்பின் வரைவிலக்கணத்தை எழுதுக.

3. கணினி மொழி பெயர்ப்புக் குறித்து எழுதுக.

பெருவினா :

மொழிபெயர்ப்பின் வரலாற்றைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. மொழிபெயர்ப்பின் தேவை

அறிமுகம் :

மானுடம் என்பது ஒன்றுதான். ஆனால் அது பல்றே இயற்கைச் சூழல்களாலும், மொழிகளாலும், மேய்ச்சல் கண்ட விடத்துத் தனித்தனியே நிலைத்து வளர்த்துப் பெருக்கிக் கொண்ட கலாச்சாரக் கூறுகளாலும் பல்வேறு விதங்களில் கிளைத்துக் கிடக்கிறது என்றாலும் மானுடம் என்பது ஒன்றுதான். கிளைத்துக் கிடக்கும் மானுடம் ஒன்றுபடத்துடிக்கும் துடிப்பு பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. அவற்றுள் மிக முக்கியமானதும் இன்றியமையாததுமான பரிமாணம்தான் மொழிபெயர்ப்பு. பல்வேறு நாடுகளில், பல்வேறு காலங்களில், பல்வேறு மொழிகளில் மனித இனம் அரிதில் முயன்று தேடிக்குவித்த அறிவுச் செல்வங்களையும், ஞானக் கருவூலங்களையும், கலை முயற்சிகளையும், மனிதன் – சமூகம் – பிரபஞ்சம் பற்றிய ஆய்வுகளையும் இடம் கடந்து, காலம் கடந்து, மொழி கடந்து இன்றைய மனிதனுக்குப் பாயச் செய்வது மொழிபெயர்ப்பு.

நோக்கம் :

1. அறிவு வளர்ச்சியிலும், மொழி வளர்ச்சியிலும் தேசிய ஒருமைப்பாட்டிலும் மொழிபெயர்ப்பின் பங்கினை அறிதல்.

2. மொழிபெயர்ப்பு நிகரன்களையும் அவற்றின் வகைகளையும் அறிதல்.

பாட அமைப்பு

2.1 மொழிபெயர்ப்பின் தேவை

2.2 மொழிபெயர்ப்பு நிகரன்கள்

2.3 தன்மதிப்பீட்டு வினாவிடைக் குறிப்பு

2.4 தொகுப்புரை

2.5 கலைச்சொற்கள்

2.6 பயிற்சி வினாக்கள்.

2.1.1. நாம் வாழும் இக்கால கட்டத்தில் முன் எப்போதைக் காட்டிலும் மொழிபெயர்ப்பின் பணி தேவைப்படுகிறது. மனித இன வரலாற்றில்

அறிவியல், தொழில்நுட்பவியல், சமூகவியல் ஆகியவை நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் வளர்ந்து வரும் காலம் இது. கண்டத்துக்குக் கண்டம், நாட்டுக்கு நாடு துறை தோறும் நாம் அரிதில் முயன்று பெற்ற அறிவுச் செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளும் பக்குவமும், தேவையும் நிலவும் காலம், மொழி வேறுபாடுகளைக் கடந்து நாடுகளும், மாநிலங்களும் ஒன்றுக்கொன்று அறிவைத்தருவதும், பெறுவதுமான தேவை உருவாகி நிலைத்துவிட்ட காலம். மனித இனம் முழுவதுமே வேலிகளைத் தாண்டி மேயாவிட்டால் மனித அறிவு – நாகரிகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி என்பதே இல்லை என்றாகிவிட்ட காலம். இக்காலகட்டத்தில் மொழிபெயர்ப்பு என்பது உலகுதழுவிய அறிவுப் பயிரின் அடிப்படைத் தேவையாகிறது. ரஷ்ய, ஜெர்மானிய, பிரஞ்ச், ஜப்பானிய, இத்தாலி மொழிகளிலும், ஆங்கிலத்திலும் திரளான அறிவியல், தொழில் நுட்பவியல் செய்திகள் வெளிவருகின்றன. சீன மொழியிலும் மிக முக்கியமான அறிவியல் செய்திகள் வெளிவருகின்றன. இவை தவிர சில குறிப்பிட்ட துறைகளில் வேறு சில மொழிகள் முன்னணியில் நிற்கின்றன. நிலக்கரிச் சுரங்கத் தொழில் துறையில் போலிஷ் மொழியும், கால்நடை மருத்துவத்துறையில் ஸ்பானிஷ் மொழியும் மிக முக்கியமான செய்திகளை வெளியிட்டுள்ளன. செக், ஹங்கேரி, சேர்ப்போகுரோட் ஆகிய மொழிகளிலும் குறிப்பிடத்தக்க வெளியீடுகள் உள்ளன. எனவே அறிவியல் துறையில் மிக முன்னேறிய நாடுகளிலும் பிற மொழிகளிலிருந்து கருத்துக்களைப் பெறுவதென்பது தவிர்க்க முடியாததாகிறது.

தன்மதிப்பீட்டு வினா 1

நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் முதலிடம் பெற்ற மொழி எது?

2.1.2 அனைத்து அறிவியல் துறைகளும் ஆங்கிலத்துக்குள் அடக்கம் என்றெண்ணுவதும் பேதமையே. 1957 யுனெஸ்கோ அறிக்கையின்படி ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியனிலிருந்து இரண்டு மில்லியன் எண்ணிகையுள்ள அறிவியல் / தொழில் நுட்பவியல் கட்டுரைகளும், அறிக்கைகளும், நூல்களும் வெளி வருகின்றன என்று தெரியவருகிறது. ஓர் ஆயிரம் இதழ்களை மாதிரியாகக் கொண்டு ஆய்வு நடத்தியதில் 44 சதவிகித வெளியீடுகள் மட்டுமே ஆங்கிலத்தில் வெளிவந்தவை என்றும், மற்றவை அனைத்தும் பிற ஐரோப்பிய, ஆசிய மொழிளில் வெளிவந்தவை என்றும் தெரிந்தது. ஆண்டுகள் செல்லச் செல்ல இந்த எண்ணிக்கை ஆங்கிலத்தில் குறையவும், பிற மொழிகளில் அதிகரிக்கவுமான போக்கு காணப்படுகிறது. ஆங்கில வெளியீடுகள் 15 சதவீதமாகக் குறையக்கூடும் என்று கணிக்கப்படுகிறது. எனவே அறிவியல் மொழிபெயர்ப்புகள் அந்தத் துறையில் வளர்ந்த மொழிகளுக்கும் இன்றியமையாதனவாகின்றன என்பது தெளிவு. வளர்ந்து

தன்மதிப்பீட்டு வினா 2

ஆங்கிலத்தில் வெளி வந்த வெளியீடுகள் எத்தனை சதவீதம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது?

தன்மதிப்பீட்டு வினா 3

அறிவுலகத்துக்குப் பாதையும் பாலமுமாக விளங்குவது யாது?

தன்மதிப்பீட்டு வினா 4

அறிவு வளர்ச்சி என்பது எந்த மொழி வாயிலாகப் பரவ முடியும்?

வரும் நாடுகளில் வழங்கும் மொழிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். "அறிவுலகத்திற்கு மொழிதான் பாதையும் பாலமும் ஆகும். அதன் எல்லைகள் விரியும்பொழுது, நமது சாலையும், பாலமும் இயல்பாகவே அவற்றை எட்ட வேண்டும். இன்றைய அறிவுலகின் எல்லைகள் எங்கோ இருக்கின்றன. நமது மொழிகள் எங்கோ நிற்கின்றன. இடைவெளி பெரிது என்பது கவலைக்குரியது. அதனிலும் கவலைக்குரியது, அந்த இடைவெளி விரிவாகிக் கொண்டே போகிறது என்பது. அது விரிவாகும் வேகமும் மிகுகிறது என்பார் டாக்டர் வா.செ.குழந்தைசாமி. வளர்ந்து வரும் நாடுகள் அனைத்திற்கும் இது பொதுவான பிரச்சினை. இந்த இடைவெளியை ஈடுகட்டி மொழியைக் கருத்துலகின் கால வேகத்துக்கு ஏற்புடையதாய் வளர்ப்பதில் மொழிபெயர்ப்பு பெரும் பங்கு வகிக்கிறது. அறிவு வளர்ச்சி என்பது தாய்மொழி வாயிலாகத்தான் பரவலாக முடியும். அறிவு வளர்ச்சி பரவலானால் தான் நாடு அறிவியல், பொருளாதாரம், அரசியல், கல்வி, கலை ஆகிய பல்துறைகளிலும் முன்னேற முடியும். ஆக, ஒவ்வொரு நாடும், இனமும் தன் தாய்மொழியைக் காலத்திற்கேற்ற கருத்துலக வளர்ச்சிகளை எடுத்தியம்பும் ஆற்றலுள்ளதாக வளர்த்துக் கொள்ள வேண்டுவது நாட்டு முன்னேற்றத்தின் அடிப்படையாகும்.

2.1.3. "எங்கே தன்குலம் தன்நாடு என்னும் குறுகிய சுவர்களால்
உலகம் துண்டாடப் படாதிருக்கிறதோ...
அங்கே அந்தச் சுதந்திர சொர்க்கத்தில் தந்தையே! எனநாடு
கண் மலரட்டும்

என்று பிரார்த்தித்தார் தாகூர். யதார்த்தங்கள், கருத்துக்கள், கொள்கைகள், தத்துவங்கள் ஆகியவை பல நூற்றாண்டுகளாக மொழிகளைக் கடந்து மனித மனங்களில் தூவப்பட்டு வந்துள்ளன. இதுவே, மனிதம் ஒன்று, உலகம் ஒன்று. தனிமனிதர்களின் சுயலாபங்களுக்காக மனிதம் துண்டாடப்படக்கூடாது என்ற கருத்துப் படிமங்கள் முளைக்கவும், உலக மண்ணில் காலூன்றித் தழைக்கவும் காரணமாயிற்று. ஒரு உலகம் என்பது மனிதத்தின் மகத்தான குறிக்கோள். இதை அடைவதற்கு மனித இனம் தேடிக்கண்ட, காண்கிற, காணவிருக்கின்ற கருத்துக்களும், சிந்தனைகளும், கருவிகளும், பொருள்களும் மொழிகளின் எல்லைகளைக்கடந்து பாயவேண்டியது அவசியம்.

2.1.4

ஒரு நாட்டின் ஒரு மூலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்துலக முக்கியத்துவம் பெற்றுவிட்ட காலம் இது. எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டின் அரசியல், பொருளாதார நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டாமல்

இருக்க முடியாது. பிஜி நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை கவிழ்க்கப்பட்டபோது, அதற்கு உலக நாடுகள் முழுவதிலும் எதிரொலி கேட்டது. தென்னாப்பிரிக்க நாடுகளில் ஆப்பிரிக்க மக்கள் அரசியல், பொருளாதார அடிப்படைகளில் ஒடுக்கப்படுகிறார்கள் என்றால், சுற்றியிருக்கும் நாடுகள் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அணு ஆயுத ஒழிப்பு பற்றி அமெரிக்காவும், சோவியத் யூனியனும் உச்சிமாநாடு கூட்டிப் பேசியபோது, எந்த நாட்டுக் குடிமகனும் அதில் அக்கறையின்றி இருக்கவில்லை. அண்மையில் ஓர் ஆப்பிரிக்க–அமெரிக்கர் அமெரிக்காவின் மக்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் இந்த மாற்றம் வரவேற்கப்பட்டது மறக்கமுடியாதது. ஆக, ஒரு நாட்டு நிகழ்ச்சி தூரத்தில் இருக்கும் இன்னொரு நாட்டை அண்மை எதிர்காலத்தில் கடுமையாகப் பாதிக்கும் நிலை இன்றைய உலக அரசியல் அரங்கில் உருவாகியுள்ளது. இப்படியொரு வலைப்பின்னல் (Complex) உறவுகள் நாடுகளிடையே நிலைபெற்றுப் போயுள்ளன. ஒவ்வொரு நாடும் அடுத்த நாட்டு அரசியல் – பொருளாதார நிகழ்ச்சிகளில் அக்கறை கொள்ளும் கட்டாயத்துக்குள்ளாகி இருக்கிறது. இவற்றையெல்லாம் ஒவ்வொரு மொழியினரும் உடனுக்குடன் அறிந்து கொள்ள செய்தித்துறையில் மொழிபெயர்ப்பின் பணி இணையற்றது.

2.1.5

உலகளாவிய அரசியலமைப்பு முறைகளில் மக்களாட்சி பேரிடம் பெறுகின்றது. இந்த ஆட்சி முறையில் பொதுமக்கள் பல்துறை அமைப்புகளின் நடைமுறைகளை அறிந்திருப்பது அவசியம். இதில் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றின் பணி குறிப்பிடத்தக்கது. செய்தி வெளியீட்டில் இவை மொழியாக்கத்தைப் பெரிதும் சார்ந்திருக்கின்றன.

2.1.6

பலமொழிகள் பேசப்படும் ஒரு நாட்டில் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குக் கலாச்சாரப் பரிமாற்றமும், அதற்கு அடிப்படையான மொழிபெயர்ப்புப் பணிகளும் இன்றியமையாதவை. இந்த நாடுகளின் அரசியல் நிர்வாகத்திற்கும், சட்டம், ஆணை, செய்தி ஆகியவற்றின் பன்மொழியாக்கம் தேவைப்படுகிறது.

2.1.7

வணிக உலகில் பொருள்களின் உற்பத்தி, தன்மை, தரம், பயன், பயன்படுத்தும் விதம் ஆகியவை பலமொழிகளில் உரைமை (Communication) பெறுவது தவிர்க்க முடியாத தேவையாகிறது.

2.1.8.

மொழி, இலக்கிய ஆய்வுத்துறைகள், குறிப்பாக இலக்கியத் திறனாய்வு, ஒப்பாய்வுத் துறைகள் மொழிபெயர்ப்பையே சார்ந்துள்ளன.

2.1.9

மனிதன் பன்முகத் தேவைகள் உள்ளவன்; பன்முக ஆர்வங்களும் ஈர்ப்புகளும் உள்ளவன். இலக்கியம், இசை, ஓவியம், அறிவியல், பொருளியல், வரலாறு, தத்துவம், நடைமுறைத் தேவைகள் என்று துறைகள் பலவாக அவனது நாட்டம் விரிகிறது. ஒன்றில் ஆழ்ந்த பயிற்சியும், ஈடுபாடும் உள்ளவன் இன்னொருவன் ஆழ்ந்தறிந்ததைப் பற்றியும் முடிந்த அளவு அறிந்து கொள்ள முயல்கிறான். மனித வாழ்வின் மிக இயல்பான கூட்டுத் தன்மையைத்தான் இது காட்டுகிறது. தன்னந்தனி முயற்சியால் மட்டும் மனிதன் உளநிறைவு பெறமுடியாது; உடம்பின் பல்வேறு தேவைகளையும் பெறமுடியாது. மனித வாழ்க்கையே கூட்டு வாழ்க்கைதான். காலங்காலமாக நிறம், மொழி, இனம், நாடு என்ற தூரங்களைக் கடந்து யார்யாரோ அரிதின் முயன்று தேடித்தந்த எத்தனையோ அறிவு அடிப்படைகளில்தான் இன்று நாம் வாழ்வின் அடிப்படைகளை அமைத்துக் கொண்டிருக்கிறோம். அழகானது, சத்தானது, பயனுள்ளது, தேவையானது என்பதை எங்குக் கண்டாலும் அதைத் தனதாக்கி மகிழும்பேறு மனிதனுக்கு உண்டு. இதை மொழியாக்கப் பணிகள் நடைமுறைச் சாத்தியமாக்கியுள்ளன. மனித இனம் முழுவதின் சாதனைகளையும் மனிதன் மிக இயல்பாகத் தனதாக்கிக் கொள்ளும் முயற்சியில் அரும் பெருங்கருவியாக அமைவது மொழிபெயர்ப்பு. அதனால், ஒட்டுமொத்தமான மனித இன வளர்ச்சி வரலாற்றில் அது பேரிடம் பெறுகிறது.

2.2. மொழி பெயர்ப்பு நிகரன்கள்

மொழிபெயர்ப்பு என்பது இதுதான் என்று பலரும் பலவிதமாய் வரையறை செய்துள்ளனர். அவற்றுள், "மூலத்துக்கு இணையான பெறும்மொழி நிகரனைக் கண்டறியும் செயல்முறையே மொழி பெயர்ப்பு என்ற ஜசடோர் பிஞ்சக் அவர்களின் வரைவிலக்கணம் இங்குக் கருதத்தக்கது. மூலத்திற்கான பெறும் மொழி நிகரன்களைக் கண்டறிவதே மொழி பெயர்ப்பின் மையப்பணியாகும்.

2.2.1. மொழிபெயர்ப்பு நிகரன்கள் (Translation Equivalents)



2.2.1.1. முறைசார் நிகரன்கள்

தன்மதிப்பீட்டு வினா 5

முறைசார் நிகரன் என்றால் என்ன?

மூலமொழியின் உருபன்கள், சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் இவற்றுக்கு இணையான பெறும்மொழி வழக்குகளை முறைசார் நிகரன்கள் என்கிறோம். ஆனால் மூலத்தில் ஒரு சொல் உணர்த்துவதைப் பெறும்மொழியில் ஓர் உருபன் உணர்த்தி விடலாம். நேர்மாறாகவும் (Vice-Versa) இருக்கலாம். மூலமொழியில் ஒரு தொடர் உணர்த்தும் பொருளைப் பெறும்மொழிச் சொல் ஒன்று உணர்த்தி விடலாம். நேர்மாறாகவும் இருக்கலாம். மூலமொழியின் வாக்கியத்துக்குப் பெறும்மொழியின் சொல் அல்லது தொடர் பதிலியாவதும் உண்டு. நேர்மாறாகவும் நிகழும். இதனால் மூலமொழிச் சொல் ஒன்றுக்குப் பெறும்மொழியில் சொல்தான் நிகரனாக இருக்கும் என்பதில்லை. எனவே மூலமொழிக்கு இணையாக முறைசார் நிகரன்கள் கீழ்வருமாறு அமையலாம்.

மூ.மொ.உருபன் == பெ.மொ.உருபன் / சொல் / தொடர் / வாக்கியம்

மூ.மொ.சொல் == பெ.மொ.உருபன் / சொல் / தொடர் / வாக்கியம்

மூ.மொ.தொடர் == பெ.மொ.உருபன் / சொல் / தொடர் / வாக்கியம்

மூ.மொ.வாக்கியம் == பெ.மொ.உருபன்/சொல்/தொடர்/வாக்கியம்

முறைசார் நிகரன்களின் இணை அமையுமாறு

மொழி குறியீடுகளாலானது. ஒரு மொழியின் குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட வடிவமைவிலும் (Pattern) இயங்குகின்றன. மொழிக்கு மொழி குறியீடுகள் வேறுபடுகின்றன. அக்குறியீடுகள் இயங்கும் வடிவமைவும், அமைப்பும் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. மிக நெருங்கிய தொடர்புடைய மொழிகளிலும்கூட குறியீடுகளிலும், குறியீடுகள் இயங்கும் வடிவமைவிலும், அமைப்பிலும் முழுமையான நிகர்மை அமைய முடியாது. இந்த வேறுபாடுகள்தாம் ஒரு மொழியைப் பிறமொழியிலிருந்து பிரித்துத் தனிமொழியாக வழங்கச் செய்கின்றன. எனவே, ஒவ்வொரு மொழிக்கும் அததற்குரிய சிறப்புக்கூறுகள் உண்டு. இதற்கு அம்மொழி பேசும் மக்களின் வரலாறு, கலாச்சாரம், அறிவு–கலை வளர்ச்சி, அவர்களுடைய வாழிடத்தின் புவியியல் அமைப்பு, தட்ப வெப்பநிலை போன்ற மொழியியல் அல்லாத கூறுகளும் காரணிகளாக அமைகின்றன. ஆகவே ஒரு மொழியின் பொருள் கூறுகள், இலக்கணக் கூறுகள் அனைத்துக்கும் இன்னொரு மொழியில் நிகரன்கள் இருக்கமுடியாது. மூலமொழியின் சில கூறுகளுக்குப் பெறும் மொழியில் நிகரன்கள் இல்லாமலும் இருக்கலாம், சில கூறுகளுக்குப் பெறும்மொழியில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிகரன்கள் இருக்கலாம். ஆகவே இரு மொழிகளுக்கிடையே முறைசார் நிகரன்களின் இணை கீழ்வருமாறு அமைகிறது :

ஒன்றுக்கு – ஒன்று

ஒன்றுக்குப் – பல

ஒன்றுக்கு – ஒன்றும் இல்லை

பலவற்றுக்குப் – பல

பலவற்றுக்கு – ஒன்று

பலவற்றுக்கு – ஒன்றும் இல்லை.

உருபன், சொல், தொடர், வாக்கியம் ஆகிய எல்லா நிலைகளிலும் இரு மொழிகளுக்கிடையே ஒன்றுக்கு – ஒன்று என்று இணை (Correspondence) அமைவது அரிதிலும் அரிது அப்படி அமைந்தால் வார்த்தைக்கு வார்த்தை என்று மொழிபெயர்ப்பு மிக எளிமையாகிவிடும். பிற இணைகள் அனைத்துமே மொழிபெயர்ப்பில் சிக்கலுக்குக் களமாகி விடுகின்றன. சில சிக்கல்களை எளிதில் மேற்கொள்ள முடிகிறது. சில மேற்கொள்வதற்கு அரிதாகி விடுகின்றன.

ஒன்றுக்கு – ஒன்று இல்லை. பலவற்றுக்கு – ஒன்றும் இல்லை என்று இணைகள் / அமையும் போது, அதாவது மூலத்தில் உள்ள உருபன் / சொல் / தொடர் / வாக்கியத்திற்குப் பெறும்மொழியில் நிகரன் இல்லை என்றால், மொழிபெயர்ப்பில் புதுமையாக்கம் முக்கிய இடம் பெறுகிறது. அறிவியல் கண்டுபிடிப்புகளின் பெயர்கள் பலவும் இந்த வகையனுக்குள் (category) அடங்கும். மொழியாளர்களுடைய (ஒரு மொழியைத் தாய்மொழியாகப் பேசும் மக்கள்) வாழிடங்களின் புவியியல் அமைப்பு, தட்பவெப்பநிலை ஆகியவற்றுக்கேற்பவும், கலாச்சார நடை முறைகளுக்கு ஏற்பவும் மொழிகளுக்கிடையே இத்தகு இணைகள் அமைவதுண்டு. எடுத்துக்காட்டாகத் தமிழில் snow என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான சொல் இல்லை. ஆனால் எஸ்கிமோ மொழியில் பத்துக்கும் மேற்பட்ட நிகரன்கள் வழக்கில் உள்ளன. காரணம் தமிழகத்தின் தட்பவெப்ப நிலையில் snowவுக்கு இடமில்லை.

எஸ்கிமோக்களின் வாழ்வே snowவில்தான், ஆனால் தமிழில் இல்லை என்று சொல்லி வாளாவிருந்துவிட முடியாது. அனைத்துலகு சார்ந்த அறிவுப் பரிமாற்றத்தில் தமிழில் snowஐச் சுட்டும் சொல்லின் தேவை தவிர்க்க முடியாததாகிறது. ஆகவே 'உறைபனி' என்ற சொல்லாக்கம் எழுகிறது.

2.2.1.2. ஆற்றல்மிகு நிகரன்கள்

மொழிபெயர்ப்பில் மூலத்தின் பொருள் கூறுகளையும் இலக்கணக் கூறுகளையும் பெறும்மொழியின் முறைசார் நிகரன்களால் பதிலீடு

செய்வது ஒருமுறை. முறைசார் நிகரன்கள் பல சமயங்களில் தெளிவின்மையையும், பொருள் மயக்கத்தையும் ஏற்படுத்தி விடுவதுண்டு. முக்கியமாக, மூலத்தின் சிறப்பு வழக்குகள் (idioms), உருவகங்கள், உணர்வுப்பொருள் வழக்குகள் (connotations) ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போதும், மூலமொழிக்கேயுரிய தனிப்பட்ட மொழியியற் கூறுகள், கலாச்சாரக் கூறுகள், உரையாடல் அமைப்புகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போதும் முழுவதும் முறைசார் நிகரன்களைப் பதி-டு செய்ய முடியாது. அதுபோன்ற இடங்களில் மூலத்தின் பொருளுக்கு முதன்மையிடம் தந்து, அப்பொருளை ஆற்றலுடன் பெறும்மொழி வாசகரின் மனதில் பதியவைக்கக்கூடிய நிகரன்களை மொழிபெயர்ப்பில் கையாள வேண்டும். இத்தகு நிகரன்களை ஆற்றல்மிகு நிகரன்கள் என்கிறோம்.

தன்மதிப்பீட்டு வினா 6

ஆற்றல் மிகு நிகரன் என்றால் என்ன?

எடுத்துக்காட்டு

ஆங்கிலம்	தமிழ்
Listen to my words	என் வார்த்தைகளைக் கவனி மொ.பெ. 1 நான் சொல்வதைக் கேள் மொ.பெ. 2
At last he touched the point.	கடைசியில் அவன் முக்கியமான செய்தியைத் தொட்டான். மொ.பெ. 1 கடைசியில் அவன் முக்கியமான செய்தியைக் கூறத் தொடங்கினான் மொ.பெ. 2
Her name often appeared in press.	பத்திரிகைகளில் அவள் பெயர் அடிக்கடி தோன்றியது மொ.பெ. 1 பத்திரிகைகளில் அவள் பெயர் அடிக்கடி அடிபட்டது. மொ.பெ. 2
He is working round the clock.	அவன் கடிகாரத்தைச் சுற்றி வேலை செய்து கொண்டிருக்கிறான். மொ.பெ. 1 அவன் இரவும் பகலும் உழைக்கிறான். மொ.பெ. 2

இவற்றுள் மொ.பெ. 1 = முறைசார் நிகரன்கள்

மொ.பெ. 2 = ஆற்றல்மிகு நிகரன்கள்

2.2.1.3. நிலையான நிகரன்கள் (Fixed equivalents)

முறைசார் நிகரன்கள் அல்லது ஆற்றல்மிகு நிகரன்கள் ஆகியவற்றுள் பலவும் நிலையான நிகரன்களாக அமைந்துவிடுவது உண்டு. மூலத்தின் கருத்துப்படிவம் வாக்கியம், தொடர், சொல் ஆகியவற்றினுக்கு நிகரன்கள் இவைதாம் என்று பெறும் மொழியில் நிலைபெற்றுவிடும் நிகரன்களே நிலையான நிகரன்கள் ஆகும்.

தன்மதிப்பீட்டு வினா 7

நிலையான நிகரன் என்றால் என்ன?

எடுத்துக்காட்டு :

	ஆங்கிலம்	தமிழ்
சொல் நிலையில்	incorrigible	திருத்தமுடியாத
	incredible	நம்பமுடியாத
தொடர்நிலையில்	bag and baggage	மூட்டை முடிச்சு
	nook and corner	மூலை முடுக்கு
வாக்கிய நிலையில்	Face is the index of the mind	அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
	Bare words buy no barley	வெறுங்கை முழம் போடுமா?

2.3. தன்மதிப்பீட்டு வினா விடைக்குறிப்பு

வினா 1. பகுதி 2.1.1. ஐப் பார்க்க

வினா 2. பகுதி 2.1.2. ஐப் பார்க்க

வினா 3. பகுதி 2.1.2.ஐப் பார்க்க

வினா 4.பகுதி 2.1.2. ஐப் பார்க்க

வினா 5.பகுதி 2.2.1.1. ஐப் பார்க்க

வினா 6. பகுதி 2.2.1.2. ஐப் பார்க்க

வினா 7. பகுதி 2.2.1.3. ஐப் பார்க்க

2.4. தொகுப்புரை :

இந்தப் பாடத்தில் மொழிபெயர்ப்பின் தேவையைக் குறித்துப் பார்த்தோம். மொழிபெயர்ப்பு நிகரன்கள் என்றால் என்பது குறித்தும் அவற்றின் வகைகள் குறித்தும் அறிந்து கொண்டோம்.

2.5. இப்பாடத்தில் படித்த புதிய கலைச் சொற்கள் பின்வருமாறு :

மொழிபெயர்ப்பு நிகரன்கள்	–	Translation equivalents
பதிலி	–	Substitute
முறைசார் நிகரன்கள்	–	Formal correspondents
ஆற்றல் சார் நிகரன்	–	Dynamic equivalents
நிலையான நிகரன்கள்	–	fixed equivalent
வடிவமைப்பு	–	pattern
உணர்வுப் பொருள் வழக்கு	–	connotations
சிறப்பு வழக்கு	–	idioms

2.6 பயிற்சி வினாக்கள் :

1. அனைத்து அறிவியல் துறைகளும் ஆங்கிலத்துக்குள் அடக்கம் என்றெண்ணுவது பேதமையே என்பதனை விளக்குக.
2. ஒருமைப்பாட்டுக்கு மொழிபெயர்ப்பு எவ்விதம் உதவுகிறது? விளக்குக.
3. மொழிபெயர்ப்பினால் வளரும் துறைகள் யாவை?
4. மொழிபெயர்ப்பு நிகரன் என்றால் என்ன? விளக்குக.
5. மொழிபெயர்ப்பு நிகரன்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்? சான்றுகள் தந்து விளக்குக.

அலகு 3 மொழி வழக்குகளும் மொழிபெயர்ப்பும் - இலக்கணத்தைத் தகவுற அமைத்தல்

மொழி வழக்குகளும் மொழிபெயர்ப்பும்

அறிமுகம் :

கிரேக்கம், லத்தீன், எபிரேயம், சமஸ்கிருதம் போன்ற சில குறிப்பிட்ட மொழிகள் மேன்மையுடையன. இறைவன் பற்றிய கருத்துக்களையும், தத்துவக் கருத்துக்களையும் எடுத்தியம்ப அவற்றுக்கே தனித்தகுதி உண்டு என்ற கருத்து பரவலாக இருந்து வந்தது. இதனால் இந்த மொழிகளிலுள்ள கருத்துக்களை வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பது கடினமானது அல்லது முடியாதது என்ற கருத்தும் நிலவியது. ஆனால் இத்தகைய கருத்து வரவேற்கத் தக்கதன்று. கருத்துக்களை எடுத்தியம்பும் ஆற்றலில் பிறமொழிகள் குறைவுள்ளன என்று கருதும் மனப்பான்மை சரியானதன்று. கிரேக்கம், லத்தீன், எபிரேயம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் கருத்து வெளிப்பாட்டில் நிறைகுறைகள் உண்டு.

மிகச் சுருங்கிய சொற்றொகுதி (Vocabulary)யுடைய மொழிகளில் மிகப்பெரிய தத்துவங்கள் மொழிபெயர்க்கப்பட்டதும் உண்டு. ஆக்கா மொழியில் பெயர்க்கப்பட்ட மார்க்சின் நற்செய்தியைச் சிறந்த மொழிபெயர்ப்பு என்று எடுத்துக் காட்டுகிறார் கேத்தரின் பீக் என்னும் அம்மையார். இந்த மொழி பேசும் மக்களுக்குக் குதிரைகளோ, கழுதைகளோ, ஆடுமாடுகளோ, திராட்சைகளோ, சந்தைகளோ, அரசியல் எல்லைகளோ என்னவென்று தெரியாதென்பதும், ஆண்டான் – அடிமை, ஏழை–பணக்காரன், மாணவன்–ஆசான் உறவு நிலைகளெல்லாம் அவர்கள் அறியாதவை என்பதும் இங்குக் கருதத்தக்கது. சொற்றொகுதி நிலையில் மிகவும் பின்தங்கிய மொழிகளிலும் சிறந்த மொழிபெயர்ப்பு என்பது சாத்தியமே என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

குறிக்கோள் :

1. மொழிபெயர்ப்பில் இடம் பெறும் இரு மொழிகளின் சிறப்பு வழக்குகள், கலாச்சார வழக்குகள் ஆகியவற்றை அறிந்திருத்தலின் இன்றியமையாமையை உணர்தல்.
2. மொழிபெயர்ப்பில் இடம்பெறும் இரு மொழிகளில் இலக்கன அமைப்புகள் வேறுபடுமாற்றைத் தமிழ் ஆங்கில எடுத்துக்காட்டுகளால் அறிதல்.

3. பெறுமொழியின் இலக்கண அமைப்புக்கு ஏற்ப மொழிபெயர்ப்பதன் தேவையைப் புரிதல்

4. பெறுமொழியின் இலக்கண அமைப்புக்கேற்ப மொழிபெயர்க்கும் வழிமுறைகளை அறிதல்.

பாட அமைப்பு

3.1 மொழியின் சிறப்புத் தன்மை

3.1.1 சிறப்பு வழக்குகள்

3.1.2 உவம வழக்குகள்

3.1.3 உருவக வழக்குகள்

3.1.4 உரையாடல் வழக்குகள்

3.1.5 கலாச்சார வழக்குகள்

3.1.6 சமூக அமைப்பு சார்ந்த வழக்கு

3.2 இலக்கணத்தைத் தகவுற அமைத்தல்

3.3 இலக்கண மாற்றம்

3.3 தன்மதிப்பீட்டு வினாவிடைக் குறிப்பு

3.4 தொகுப்புரை

3.5 கலைச் சொற்கள்

3.6 பயிற்சி வினாக்கள்

3.1. மொழியின் சிறப்புத் தன்மை

ஒவ்வொரு மொழிக்கும் அதனதன் சிறப்புத்தன்மை உண்டு. ஒரு சொல்லில் எழுத்துக்கள் இடம்பெறும் வரிசைமுறை, சொல்லாக்க முறைகள், சொற்றொடர் இலக்கண விதிமுறைகள், சிறப்பு வழக்குகள் (idioms), உவம, உருவக அணி நல வழக்குள், உரையாடல் அமைப்புகள் ஆகியவை பற்றிய ஒரு மொழியின் தனித்தன்மையை அம்மொழியின் தனிச்சிறப்புத்தன்மை (Genius) என்று கூறுவர். மொழிபெயர்ப்பில் பெறும்மொழியின் தனிச் சிறப்புத் தன்மைக்கு முக்கியத்துவம் தரவேண்டும். மூலமொழியிலிருந்து ஒரு செய்தியைப் பெறும்மொழியில் தர முயலும்போது, அம்மொழி பெயர்ப்பில் பெறும் மொழியின் இயல்புக் கூறுகளுக்கே முதன்மையிடம் தர வேண்டும். மொட்டை மாடியில் இருக்கும் தொட்டியிலுள்ள நீரைக் குழாய்களின் வழியாகப் பிடிக்கும்போது அந்தத் தொட்டியைப் போன்றதொரு கொள்கலனில்தான் பிடிக்க வேண்டும் என்பதில்லை. நாம் பயன்படுத்துவதற்குப் பாங்காய் அமைந்த நம்மிடமுள்ள பாத்திரங்களிலேயே அந்நீரைப் பிடித்துப் பயன்படுத்துகிறோம். அதுபோல பெறும்மொழி வாசகனுக்குப் பழகிப்போன பெறும் மொழியின் இயல்புகளுக்கும், தனிச்சிறப்புத் தன்மைகளுக்கும் ஏற்ப மூலமொழிச் செய்தியைப் பெறும்மொழியில் தரவேண்டும்.

இப்படிச் செய்யும்போது மொழிபெயர்ப்பில் மூலத்தின் வடிவக் கூறுகளுக்கு இணையான வடிவக் கூறுகள் இல்லாமல் போகலாம். ஆனால் அம்மொழிபெயர்ப்பு வாசகனுக்கு மிக இயல்பாக இருக்கும். பெறும்மொழியின் இயல்புகளுக்கு முதன்மை அளித்துப் பொருள் பிறழாமல் செய்யும் மொழிபெயர்ப்பே சிறப்பாக அமையும். இப்பணியைச் செம்மையாகச் செய்ய மூலமொழி, பெறும்மொழி இரண்டின் சொற்றொகுதி, இலக்கண அமைப்பு இவற்றோடு இவற்றின் சிறப்புச் சொல் / தொடர் வழக்குகளையும் (idioms and phrases) உவம, உருவக, அணிநல வழக்குகளையும் (figurative usages) உரையாடல் அமைப்புகளையும், கலாச்சாரக் கூறுகளையும் ஒரு மொழிபெயர்ப்பாளன் நன்கு பயின்றிருத்தல் வேண்டும்.

3.1.1. சிறப்பு வழக்குகள் (idioms)

ஒரு மொழியின் சிறப்பு வழக்குகளுக்கு நேர்பொருள் கண்டால், மொழிபெயர்ப்பு பொருளற்றதாகி நகைப்பைத் தரும், எனவே மூலத்தின் சிறப்பு வழக்குகளை இனங்காணுமளவுக்கு (identify) ஒரு மொழிபெயர்ப்பாளன் அவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மூலத்தில் காணப்படும் சிறப்பு வழக்குகளுக்கு நிகரான சிறப்பு வழக்குகள்

பெறும்மொழியில் இருக்குமானால், மொழிபெயர்ப்பில் அவற்றைப் பயன்படுத்துவது சிறப்பு.

(எ.டு.)

ஆங்கிலம்	தமிழ்
We escaped by the skin of our teeth	நாங்கள் மயிரிழையில் உயிர் தப்பினோம்
Kannan bore many prizes at the school sports	பள்ளி விளையாட்டு விழாவில் கண்ணன் பல பரிசுகளைத் தட்டிக் கொண்டு போனான்.

மூலத்தின் சிறப்பு வழக்குகளுக்கு நிகரான சிறப்பு வழக்குகள் பெறும்மொழியில் அகப்படாத போது, அவற்றின் பொருளைத் தெளிவாகப் புலப்படுத்தும் பெறும்மொழிச் சொற்கள், அல்லது தொடர்களைப் பயன்படுத்தலாம்.

(எ.டு.)

ஆங்கிலம்	தமிழ்
She broke off in the middle of her story.	பாதிக்கதையில் அவள் திடீரென்று நிறுத்தினாள்
The oldman could not call up past events.	கடந்துபோன நிகழ்ச்சிகளை அக்கிழவனால் நினைவுகூர முடியவில்லை

சில சமயங்களில் மூலத்தின் சாதாரண வழக்குகளைப் பெறும் மொழியின் சிறப்பு வழக்குகளால் சிறப்பாக உணர்த்தவும் முடியும்.

(எ.டு.)

ஆங்கிலம்	தமிழ்
His performance was fantastic!	சும்மா அசத்திட்டான்!

3.1.2 உவம வழக்குகள்

ஒரு பொருளையோ, நிகழ்ச்சியையோ, பண்பையோ உவமை மூலம் விளக்குவதில் எல்லா மொழிகளும் ஆர்வம் காட்டுகின்றன. இதற்கு உவமைகளில் சில உவமை வழக்குகளாக ஒரு மொழியில் நிலைபெற்று

தன்மதிப்பீட்டு வினா 2

உவம வழக்கு என்றால் என்ன?

விடுகின்றனன. ஒரு மொழியின் உவம வழக்குகளுக்கு நேர்நிகரான உவம வழக்குகள் இன்னொரு மொழியில் இருப்பதுண்டு. ஆனால் ஒரு மொழியின் எல்லா உவம வழக்குகளுக்கும் இன்னொரு மொழியில் நேர்நிகரான உவம வழக்குகள் இருப்பதில்லை. வேறுவிதமான உவம வழக்குகள் இருக்கும். ஒரு மொழியின் சில உவம வழக்குகளுக்கு நிகராகச் சில மொழிகளில் உவம வழக்குகளே இருப்பதில்லை என்றாலும் சாதாரண வழக்குகளால் உவம வழக்குகளின் கருத்தைப் புலப்படுத்திவிட முடியும்.

நேர் நிகரான உவம வழக்குகள்

ஆங்கிலம்	தமிழ்
Clear as Crystal	படிகம் போல் தெளிவாக
Smooth as Silk	பட்டுப்போல் மென்மை
Silent as grave	மயான அமைதி

நேர் நிகரில்லாத நிகர் உவம வழக்குகள்

ஆங்கிலம்	தமிழ்
White as snow	தும்பைப்பூ போல் வெண்மை
Light as a leaf	காற்றுப்போல் லேசா
Slow as a snail	ஆமை போல் மெதுவாக
Sour as vinegar	புளியங்கா மாதிரி புளிப்பு

3.1.3 உருவக வழக்குகள்

சிறப்பு வழக்குகளைப் போலவே மூலத்தின் உருவக வழக்குகளை மொழிபெயர்ப்பதிலும் கவனம் தேவை. உருவக வழக்குகளுக்கு நேர்பொருள் காண்பது பிழையான பெயர்ப்பாகி விடக்கூடும். மூலத்தின் உருவக வழக்குகளை அவற்றுக்கிணையான பெறும்மொழி உருவக வழக்குகளால் புலப்படுத்துவது சிறப்பு.

ஆங்கிலம்	தமிழ்
He turned a deaf ear to my advice.	நான் சொன்னதெல்லாம் அவனுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்குதான்.
He is lion in the battle.	அவன் போரிலே புலி

மூலத்தின் உருவக வழக்குகளுக்கு நிகரான உருவக வழக்குகள் பெறும்மொழியில் இல்லாதபோது, பெறும்மொழியின் சாதாரண வழக்குகளால் மூலத்தின் பொருளைப் புலப்படுத்திவிட முடியும்.

ஆங்கிலம்	தமிழ்
Please take your seat.	உட்காருங்க / அமருங்கள்
My father gave a bit of his mind.	என் தந்தை என்னைக் கடிந்து கொண்டார்.

மூலத்தின் சாதாரண வழக்குகளைப் பெறும்மொழியின் உருவக வழக்குகளால் ஆற்றலுடன் புலப்படுத்தக் கூடுமானால், பெறும் மொழியின் உருவக வழக்குகளைக் கையாளலாம்.

ஆங்கிலம்	தமிழ்
Does he have the power to kill me?	தலையைச் சீவிடுவாரோ?

சில சமயங்களில் மூலத்துக்கு நிகரான உருவக வழக்குகள் பெறும் மொழியில் இருந்தாலும், அவை மூலத்தின் பொருளைத் தெளிவாகவும், எளிமையாகவும் புலப்படத்தத் தவறுமானால், எளிய சாதாரண உருவகமல்லாத நிகரன்களை மொழிபெயர்ப்பில் பயன்படுத்துவது சிறப்பு.

ஆங்கிலம்	தமிழ்
They were of one heart and soul.	அவர்கள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாய் இருந்தார்கள் – மொ.பெ.1 அவர்கள் ஒரே சிந்தனையுள்ளவர்களாய் இருந்தார்கள் – மொ.பெ.2
You shall speak into the air.	நீங்கள் ஆகாயத்தில் பேசுவீர்கள். – மொ.பெ.1 உங்கள் பேச்சு காற்றோடுதான் போகும் – மொ.பெ.2
You should bear fruit.	நீங்கள் கனிதர வேண்டும் – மொ.பெ.1 நீங்கள் பயன் நல்கி வாழ வேண்டும் – மொ.பெ.2

இவை ஒவ்வொன்றிலும் மொ.பெ.2 தான் பொருள் தெளிவுள்ள மொழிபெயர்ப்பாகும்.

3.1.4. உரையாடல் வழக்குகள்

மூலமொழி பெறும்மொழி ஆகியவற்றில் இடம்பெறும் உரையாடல்கள் ஒரே அமைப்பில் நிகழ்வதில்லை. ஒரே மொழியில் நிகழும் உரையாடல்களும் உரையாடல் நிகழும் சூழமைவு (Situation) உரையாடுபவர் தம் வயது, தொழில், சாதி, சமயம், கல்வித்தகுதி, இருவரின் உறவுநிலை, பழகிய கால அளவு ஆகியவற்றுக்கேற்ப வேறுபடுகின்றன. மூல உரையாடல்களின் இந்தக் கூறுகளையெல்லாம் ஒரு மொழிபெயர்ப்பாளன் ஆழ்ந்தறிந்த பின்னரே மொழிபெயர்க்கத் தொடங்க வேண்டும். அப்படி மொழிபெயர்க்கும் போதும், பெறும்மொழியின் உரையாடல் இயல்புகளுக்கேற்ப மூலத்தைப் பெறும்மொழியில் வடித்துத் தரவேண்டும்.

(எ.டு.)

ஏற்கனவே அறிமுகமான இரு நடுத்தர வயது மனிதர்கள் டீக்கடையில் சந்தித்துக் கொள்கின்றன. அவர்கள் ஆங்கிலேயரானால் அவர்தம் உரையாடலும், தமிழரானால் அவர்தம் உரையாடலும் அமையுமாறு :

ஆங்கிலம்	தமிழ்
No. 1 : Hellow, How are you?	நபர் 1 : அடடே! வாங்க சௌக்கியமா?
No. 2 : Pretty well. thanks, and you?	நபர் 2 : உங்க புண்ணியத்துல நல்லாருக்கேங்க. நீங்க சுகந்தானே?
No. 1 : I dodn't expect to meet you here	நபர் 1 : உங்களை இங்கே பார்ப்பேன்னு நினைக்கல.
No. 2 : I too. But it's good to see you again	நபர் 2 : நானுந்தான். ஆனா உங்களை மறுபடியும் பார்த்தது ரொம்ப சந்தோஷம்
No. 1 : How about a cup of coffee?	நபர் 1 : காப்பி சாப்பிடுங்க
No. 2 : A cup of tea will be fine.	நபர் 2 : காப்பி குடிக்கிறதில்–ங்க. டீன்னா தேவல

நடுத்தர வயது டாக்டர் ஒருவரும் அவருக்கு ஏற்கனவே அறிமுகமான பாலு என்ற இளைஞனும் மருத்துவமனையில் பேசிக் கொள்வது :

ஆங்கிலம்	தமிழ்
Dr. : Balu, What is your trouble?	டாக்டர் : என்ன, என்ன ஆச்சு?
Balu : I am down with fever Doctor.	பாலு : ஒரே காய்ச்சல் டாக்டர்.
Dr. : How long have you been suffering.	டாக்டர் : எத்தனை நாளா?
Balu : For the past two days.	பாலு : ரெண்டு நாளா.
Dr. : Did you try any medicine	டாக்டர் : ஏதாவது மருந்து சாப்பிட்டியா?
Balu : No. I didn't try any	பாலு : இல்ல டாக்டர்.
Dr. : Take this medicine and we'll see.	டாக்டர் : இந்த மருந்தைச் சாப்பிடு பார்ப்போம்.
Balu : Shall I come tomorrow?	பாலு : நாளைக்கு வரட்டுமா டாக்டர்?
Dr. : Yes, if you still have the trouble.	டாக்டர் : நாளைக்கும் இப்படியே இருந்தா வந்துரு.

3.1.5 கலாச்சார வழக்குகள்

ஒரு மொழியின் வழக்குகளுக்கும் அம்மொழி வழங்குமிடத்தின் புவியியல் அமைப்பிற்கும், தட்பவெப்பச் சூழலுக்கும், அவர்களின் சமூக பொருளாதார கலாச்சார பின்புலத்துக்கும் மிகுந்த தொடர்பு உண்டு என்று பார்த்தோம். மீனவரிடம் மீனுக்கும், காற்றுக்கும் பல பெயர்கள் உண்டு. அரேபியர் மணலைப் பல்வேறு சொற்களால் குறிக்கிறார்கள். எஸ்கிமோக்களிடம் snowவிற்குப் பல பெயர்கள் உண்டு. மொழி வழங்கும் இடமானது மொழியின் மீது செலுத்தும் ஆட்சியையே இவை குறிக்கின்றன. இனிய வரவேற்பைக் குறிக்கும்போது தமிழில் "அகங்குளிர வரவேற்றனர்" என்கிறோம். இதே கருத்தை உணர்த்த ஆங்கிலத்தில் "They extended a warm welcome" என்று கூறுகிறார்கள். ஒரே கருத்தை முறையே குளிர்ச்சி, வெம்மை என்ற எதிரெதிர்ப் பொருளுடைய சொற்களால் உணர்த்த முற்படுவதற்கும் மொழி வழங்குமிடங்களின் தட்பவெப்ப நிலையே காரணமாகிறது. கதிரவனது கருணையை அதிகம் அனுபவிக்கும் தமிழகத்து மக்கள் குளுமையை நாடுவதும்,

அக்கருணையை மிக அளவாகவே அனுபவிக்கும் இங்கிலாந்து மக்கள் வெம்மையை நாடுவதும் முறையே அவரவர் மொழியில் பதிவாகியிருப்பதையே இது காட்டுகிறது.

'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே', 'அமாவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா?' என்ற தமிழ்ப் பழமொழிகளுக்கு இணையாக ஆங்கிலத்தில் முறையே "Do not rob Peter to pay Paul", "Christmas comes but once a year" என்ற பழமொழிகள் வழங்குகின்றன. அந்தந்த மொழியினரிடையே பெருவழக்காய் இருக்கும் சமயங்களின் தாக்கத்தையே இப்பழமொழிகள் காட்டுகின்றன.

மூலமொழி பேசும் மக்களின் வாழ்வோடு ஒன்றிப் போன சில பழக்கங்களைப் பெறும்மொழி பேசும் மக்கள் முற்றிலும் அறியாதிருக்கலாம். இத்தகைய கலாச்சார இடைவெளிகளும் (Cultural Gaps) மொழிபெயர்ப்பில் சிக்கலை ஏற்படுத்துகின்றன. இரட்டுடுத்திச் சாம்பலில் உட்காருவதென்பது தாங்கள் செய்த பாவங்களைக் குறித்து வருந்தி மனந்திரும்பும் யூதர்கள் மேற்கொள்ளும் ஒரு செயல். "Sitting in sack cloth and ashes" என்றுமட்டும் கூறினால், மனந்திரும்புதல் என்பது யூதர்களுக்குப் புரியும். ஆனால் ஆங்கில வாசகருக்கு இது இடர்பாடாக அமையும். ஆகவே "to show that they were repentant" என்று சேர்ப்பது ஆங்கில மொழிபெயர்ப்பில் அவசியமாகிறது. தமிழிலும், 'அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள்' என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது,

மிகுதியான கோபத்தில் தாங்கள் உடுத்தியிருக்கும் ஆடைகளைக் கிழித்துக் கொள்வதும் யூதர்களின் வழக்கம். ஆகவே "The high priest rent his garment" என்பது ஒரு குறியீட்டுச் செயல் (Symbolic action). மேற்குறித்த வழக்கம் இல்லாதவர்களுக்கு இந்தத் தொடர் ஒரு புதிராயிருக்கும். இத்தொடர் போன்றதொரு உரையினைக் (expression) கண்டு பிறமொழியினர் பலவிதமாய்க் குழம்பியிருக்கின்றனர். கோபம் வந்தால் அடுத்தவன் சட்டையையல்லவா கிழிப்பான். தன் சட்டையைக் கிழிப்பானா? எனவே அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும் என்றெல்லாம் குழம்பியிருக்கின்றனர். அது போலவே தலையை ஆட்டுதல் என்பது எபிரேயரிடையே ஏளனம் செய்து அவமதிப்பதைக் குறிக்கும். தமிழராகிய நாமோ சரி என்று சொல்வதற்கு ஒரு விதமாய்த் தலையாட்டுகிறோம். இல்லை என்று சொல்வதற்கு இன்னொரு விதமாய்த் தலையாட்டுகிறோம். 'மாட்டேன்' என்று சொல்வதற்கு வோறாரு விதமாய்த்

தலையாட்டுகிறோம். ஆகவே குறியீட்டுச் செயல்களைக் குறிப்பிடும் போது மொழிபெயர்ப்பில் அவை எந்தக் கருத்துக்குக் குறியீடாக வருகிறது என்பதையும் சேர்த்துக் கூற வேண்டும்.

(எ.டு.) The priests wagged their head in derision.

மூலமொழி ஆசிரியனுக்கு இதுபோன்ற சிக்கல்கள் இல்லை. ஏனென்றால் அவன் பயன்படுத்தும் கலாச்சாரக் குறியீடுகள் மூலமொழி வாசகர்கள் நடைமுறையில் பழகி அறிந்தவை. ஆனால் அவை பெறும்மொழி வாசகர்கள் அறியாதவை. எனவே மூலத்தின் கருத்துக்கள் பெறும்மொழி வாசகரைச் சரியாகச் சென்றடைவதற்கு மொழிபெயர்ப்பாளன் அதிக கவனம் எடுக்க வேண்டியுள்ளது. உபநயனம், பூப்புனித நீராட்டு விழா, அம்மன் கொடை போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போதும் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. இத்தகு கலாச்சார வழக்குகளை அடிக்குறிப்பில் சுருக்கமாக, ஆனால் பொருள் புலப்படும்படிக் குறிப்பிடுவது அவசியமாகிறது.

3.1.6 சமூக அமைப்பு சார்ந்த வழக்கு

ஒரு மொழியானது அம்மொழி பேசுவோரின் கலாச்சாரக் கூறுகளை மட்டுமல்லாமல் அவர்களின் சமூக அமைப்பையும் பிரதிபலிக்கிறது. தமிழில் உரையாடும் இருவர் தம் உரையாடலில் ஒருவருக்கொருவர் நீ–நீ, நீங்கள்–நீங்கள் என்று முன்னிலை இடப்பெயர்களை வழங்கிக் கொண்டால், அவர்கள் சமூகத்தில் ஒரு தட்டில் இருப்பவர்கள் என்பதும் நீ–நீங்கள், நீங்கள் – நீ என்று வழங்கினால் உரையாடுபவர்களின் சமூகநிலை ஏற்றத்தாழ்வுள்ளது என்பதும் புரியும். சமூக ஏற்றத்தாழ்வு வழக்குகள் உள்ள ஒரு மொழியில் இவற்றைப் புறக்கணித்துவிட்டு மொழிபெயர்த்தால், அது வாசகருக்கு இடர்ப்பாடாய் அமையும். ஒரு மத்தியதரவர்க்கக் குடும்பத்து மனைவி தன் கணவனை நீ என்று அழைப்பதாகவும், கணவன் அவளை நீங்கள் என்று அழைப்பதாகவும் தமிழில் உரையாடல் அமைத்தால், அது நடைமுறைத் தன்மையற்றதாகிவிடும். தமிழகத்துக் குடும்ப உறவுகள் எற்றத் தாழ்வுகளற்ற சமத்துவத்தைக் காணும்வரை, இப்போதிருக்கும் மொழிபெயர்ப்பில் கணவன்–மனைவி உரையாடலில் நீ–நீங்கள் உறவு நிலையைப் பிரதிபலிப்பதே பொருந்தும்.

3.2 இலக்கணத்தைத் தகவுற அமைத்தல்

கணிதத்தைப் போலவே மொழியும் குறியீடுகளாலான அமைப்பே. ஆனால் மொழியானது வேறு எந்தக் குறியீடுகளாலான அமைப்பைக்

காட்டிலும் மிகவும் சிக்கல் நிறைந்தது, நெகிழ்வுள்ளதுமாக அமைந்துளளது. செயற்கை மொழிகள் (artificial languages) உட்பட செயற்கை அமைப்புகள் (artificial system) அனைத்தும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்குகின்றன. மனித குழுக்களால் இயல்பாகப் பேசப்படும் இயற்கை மொழிகளும் விதிமுறைகளுக்குட்பட்டே இயங்குகின்றன. ஆனால் அவை முற்றிலும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதில்லை. மேலும் எல்லா இலக்கண விதிகளும் தொடர்ச்சியான மாற்றத்துக்கு உட்பட்ட வண்ணமிருக்கின்றன. ஒரு மொழியின் இலக்கண விதிகள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் வழங்கும் அந்த மொழியின் இயங்குமுறைகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன. அவ்விதிகள் எல்லாக் காலத்துக்கும் பொருந்துவதில்லை. மேலும் அவ்விதிகள் தொகுக்கப் பெற்ற காலகட்டத்திலும் கூட அம்மொழி வழங்கும் பல்வேறு இடங்களிலும், பல்வேறு குழுவினரிடையேயும், பல்வேறு கூழமைவுகளிலும் (situations) அவ்விதிகளிலிருந்து வேறுபடும் மொழிக்கூறுகள் உண்டு. ஆக்கமும், கழிவும், புதுமையாக மொழியானது மாறிக்கொண்டே செல்லும் தன்மையது. ஆக, மொழியானது முடிந்த முடிவான அமைப்பு அன்று. மொழியின் இத்தகு கட்டுக்குள் அடங்காத தன்மைதான் மொழிபெயர்ப்பைச் சிக்கல நிறைந்ததாக்குகிறது. ஒரு மொழியின் பொருள் உணர்த்தும் திறத்தில் அம்மொழியின் மொழியியல் கூறுகள் மட்டுமல்லாமல், இடம், காலம், கூழல், ஆக்கியோன் / பேசுவோன் / கேட்போன்/ உள்ளடக்கம (content), வரலாற்றுச் கூழமைவு (historical situation), கலாச்சாரப் பின்புலம் (cultural setting), ஆகிய மொழியியல் அல்லாத கூறுகளும் (extra linguistic factors) பங்கு வகிக்கின்றன. தொழில் நுட்பவியல் சார்ந்த மொழிபெயர்ப்புகளில் கூட வரலாறு, கலாச்சாரம், கோட்பாடு, ஆகியவற்றின் தாக்கம் முக்கிய இடம் பெறுகிறது என்பர்.

மொழிபெயர்ப்பில் மேற்கூறிய பல்வேறு கூறுகள் இடம்பெற்றாலும், மொழியியல் கூறுகளே முதன்மையிடம் பெறுகின்றன. எனவே ஒரு மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்பில் சம்பந்தப்பட்ட மூலமொழி, பெறும்மொழி ஆகிய இருமொழிகளின் மொழியியற் கூறுகளை அறிந்திருத்தல் அடிப்படை அவசியமாகிறது.

ஓர் அறிவியல் மொழிபெயர்ப்பாளனுக்குத் தான் சார்ந்த அறிவுத்துறையில் ஆழ்ந்த அறிவும், அத்துறையில் பயிலும் கலைச் சொற்களுக்கும், கருத்துப்படிவங்களுக்குமான பெறும்மொழி நிகரன்களில் பயிற்சியும் இருந்தாலே போதும், வேதியியல், கணிதம், போன்ற துறைகளில் அவன் நல்ல மொழிபெயர்ப்புகளைத் தர முடியும் என்ற

கருத்து மேற்கு நாடுகளில் நிலவுகிறது. ஆனால் அனைத்துலகக் குறியீடுகளை மிகுதியும் பயன்படுத்தும் கணிதம், வேதியியல் போன்ற துறைகளிலும் கூட மொழிபெயர்ப்பில் வெறும் சொல் நிகரன்களையும் (word equivalents), கருத்து நிகரன்களையும் (concept equivalents) சார்ந்து நிற்க முடியாது. முழுக்க முழுக்கக் குறியீடுகளையும், சமன்பாடுகளையும் கொண்ட பகுதிகளைச் சொல் நிகரன்களால் பெறும்மொழி வாசகருக்குப் புரிய வைக்க முடியும். ஆனால் கணிதமும், வேதியியலும் சாதாரண மொழியைப் பயன்படுத்தும் இடங்கள் உண்டு. இது கணிதத்தைக் காட்டிலும் வேதியியலில் அதிகம். இவ்விடங்களில் வெறும் சொல் / கருத்து நிகரன்களை அடுக்கிச் செல்வது மொழிபெயர்ப்பாகாது. பெறும்மொழியின் கட்டமைப்பு விதிகள் அனைத்தும் அங்கே செயற்படுகின்றன. ஆகவே ஓர் அறிவியல் மொழி பெயர்ப்பாளனுக்கு மூல மொழி, பெறும்மொழி ஆகிய இரண்டும் செயற்படும் விதம் பற்றிய அறிவு இன்றியமையாததாகிறது.

ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்பினைக் கருத்தில் கொண்டு, இவ்விரு மொழிகளின் மொழியியல் கூறுகள் மொழிபெயர்ப்பில் செலுத்தும் ஆட்சியினைக் காண்போம்.

3.2.1. சொற்களின் வரிசை முறை (word order)

தன் மதிப்பீட்டு வினா
3. தமிழ் வாக்கிய சொல்வரிசை அமைவு மாற்றத்தை விளக்குக?

ஆங்கில வாக்கிய அமைப்பில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற வரிசை முறையும் (SVO) தமிழ் வாக்கிய அமைப்பில் எழுவாய், செயற்படுபொருள், பயனிலை என்ற வரிசை முறையும் (SOV) கடைப்பிடிக்கப்படுகின்றன. இதனால் ஆங்கிலம் – தமிழ், தமிழ் -- ஆங்கிலம் மொழிபெயர்ப்பு வாக்கியங்களில் சொற்கள் இடமாற்றம் பெறுவது தவிர்க்க முடியாததாகிறது.

Gopal	Met	Sankar
1	2	3
கோபால்	சங்கரைச்	சந்தித்தான்
1	3	2

ஆங்கிலம் 123 ⟷ 132 தமிழ்

வாக்கிய நிலையில் மட்டுமல்லாமல் தொடர்நிலையிலும் (Phrase Level) சொற்களின் வரிசைமுறை ஆங்கிலத்திலும், தமிழிலும் வேறுபடுகின்றன.

The Indian Constitution came into force on

26th	January	1950
1	2	3
1950ஆம் ஆண்டு	ஜனவரித் திங்கள்	26ஆம் நாள்
3	2	1

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்தது

ஆங்கிலம் 123 ⟷ 321 தமிழ்

சிறப்புப் பெயரும், இயற்பெயரும் சேர்ந்து வருமிடங்களில் சிறப்புப் பெயரை முற்கூறி இயற்பெயரை அடுத்துக் கூறுவது தமிழ் மரபு

கணியன்	பூங்குன்றனார்
1	2
புரட்சிக் கவிஞர்	பாரதிதாசனார்
1	2

ஆங்கிலத்தில் இவ்வரிசை மாறிவரும்.

Tagore	the poet
1	2
Alexander	The great
1	2

தமிழ் 12 ⟷ 21 ஆங்கிலம்

தமிழ்ப் பெயர்த்தொடரில் அடை, சினை, முதல் என்ற மூன்றும் முறை மயங்காது வரவேண்டும். ஆங்கிலத்திலும் இதே வரிசை முறை அமைகிறது

நரை முடிக் கிழவன்
Grey-haired oldman

ஒன்றைக் கண் மனிதன்
one-eyed man

தமிழ் 123 ⟷ 123 ஆங்கிலம்

தன்மதிப்பிட்டு வினா 4. தமிழ் வாக்கிய எழுவாய்க்கும் பயனிலைக்கும் அமைய வேண்டிய இன்றியமையாத இயைபுகள் யாவை?

3.2.2. தமிழ் வாக்கிய அமைப்பில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் திணை, பால், எண், இட இயைபு இன்றியமையாதது. ஆங்கில வாக்கியங்களில் பெரும்பான்மையும் இத்தகைய இயைபு இல்லை. ஆங்கில வாக்கியத்தைத் தமிழில் பெயர்க்கும்போது, தமிழ் வாக்கிய இயல்புக்கேற்பப் பெயர்க்க வேண்டும்.

ஆங்கிலம்	**தமிழ்**
I sang	நான் பாடினேன்
We sang	நாங்கள் பாடினோம்
You sang	நீ பாடினாய் / நீங்கள் பாடினீர்கள்
He sang	அவன் பாடினான்
She sang	அவள் பாடினாள்
They sang	அவர்கள் பாடினார்கள்
The skylark sang	வானம்பாடி பாடியது

ஆங்கிலத்தில் நிகழ்கால வினையில் மட்டும் படர்க்கை, ஒருமை, எழுவாய்க்குரிய இயைபு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

He sings

She sings

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்கள் எழுவாயாக வரும்போது எழுவாய்க்கும் வினைக்குமிடையே எண் இயைபும், இட இயைபும் காணப்படுகின்றன.

He is going I am going

They are going You are going

3.2.3. நாய், பசு, குதிரை போன்ற விலங்குகளை ஆங்கிலத்தில he, she என்று குறிப்பது போல் குறிக்கும் வழக்கு தமிழில் இல்லை. நாய்க்கும், பசுவுக்கும் உயர்திணைப் பெயர் கூட்டி அழைக்கும் வழக்கு ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் பொதுவானது.

3.2.4. சில பெயர்ச்சொற்கள் ஒருமையில் ஒரு பொருளும் பன்மையில் முற்றிலும் வேறான இன்னொரு பொருளும் தரும் வழக்கு ஆங்கிலத்தில் காணப்படுகிறது.

good	நன்மை	Goods	சரக்கு
advice	அறிவுரை	advices	தகவல்
Iron	இரும்பு	irons	விலங்கு
force	விசை	forces	இராணுவம்

இத்தகு வழக்கு தமிழில் இல்லை.

3.2.5. ஆங்கிலத்தில் சில பெயர்ச்சொற்கள் ஒருமையில் ஒரு பொருளும் பன்மையில் இரு பொருள்களும் தருகின்றன.

Custom	—	பழக்கம்	Customs	—	பழக்கங்கள், சுங்கவரி
Pain	—	வலி	Pains	—	வலிகள், கவனம்
quarter	—	கால்பகுதி	quarters	—	கால்பகுதிகள், வசிப்பிடம்
effect	—	விளைவு	effects	—	விளைவுகள், சொத்து

இத்தகு வழக்கு தமிழில் இல்லை.

ஆங்கிலத்தில் சில பெயர்ச்சொற்கள், ஒருமையில் இருவேறு பொருளும், பன்மையில் ஒரே பொருளும் தருகின்றன.

Light	—	வெளிச்சம், விளக்கு	Lights	—	விளக்குகள்
People	—	நாடு, மக்கள்	Peoples	—	நாடுகள்

3.2.6 சில பெயர்ச்சொற்கள் ஆங்கிலத்தில் பன்மையாக மட்டுமே வழங்குகின்றன.

Scissors, spectacles

trouseres, drawers

tidings, assets

இவற்றைத் தமிழில் ஒருமையாகவே வழங்குகிறோம்.

3,2,7 ஆங்கிலத்தில் தொகைப் பெயர்கள் (collective nouns) ஒருமையாக இருந்தாலும் பன்மை வினைனையே ஏற்கும்

These poultry are mine.

These cattle are mine.

3.2.8 ஒன்று, இரண்டு என்று எண்ண முடிந்த ஒருமைப் பெயர்களுக்கு முன் a, an, the போன்ற சுட்டுப் பெயரடைகளுள் (demonstrative adjectives / articles) ஒன்றைச் சேர்த்து எழுதுவது ஆங்கிலத்தில் பொது வழக்கு.

This is a basket.

This is an undergraduate college,

This is the book I serached for.

இவ்வழக்கு தமிழில் இல்லை. இதனால் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கு போது சில நீக்கங்களும் (deletions) தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கும்போது சேர்க்கைகளும் (additions) தவிர்க்க முடியாதவையாகின்றன.

மேலும் a, an, the என்ற சுட்டுப்பெயரடைகள் ஒரு வாக்கியத்தில் மறித்து வரும்போது வாக்கியத்தின் பொருள் மாறுபடும்.

I have a black and white dog.

என்னிடத்தில் கறுப்பும் வெள்ளையுமான நாய் இருக்கிறது.

I have a black and a white dog.

என்னிடத்தில் ஒரு கறுப்பு நாயும், ஒரு வெள்ளை நாயும் உள்ளன.

The Secretary and Treasurer is absent

செயலரும், பொருளாளருமானவர் வரவில்லை

The Secretary and the Treasurer are absent

செயலர்,பொருளாளர் இருவரும் வரவில்லை.

இடப்பெயர், பொருட்பெயர் போன்றவற்றிற்கு முன்னரும் பரந்த பொருளில் வரும் பொதுப் பெயர்களுக்கு (Common Noun) முன்னரும் gold, cotton போன்ற பெயர்களுக்கு முன்னரும் ஆங்கிலத்தில் சுட்டுப் பெயரடைகள் (articles) வருவதில்லை.

Madurai is a temple city.

Arjun was known for his heroism

Tiger is a greatful dog.

Man is provided with supreme powers.

Cotton grows in large scale in Egypt.

3.2.9. ஆங்கிலத்தில் ஒரு பெயர்ப்பதிலி (pronoun)யானது தொகைப் பெயருக்குப் (collective noun) பதிலாக வந்தால், அது ஒருமையாக அமைய வேண்டும்.

The **crew** mutinied in the middle of the voyage and murdered **its** officers.

The **Jury** gave **its** veridict

இதுபோன்றவிடங்களில் தமிழ், தொகைப் பெயர்களைப் பன்மையாக்கிப் பன்மை வினை கொண்டு வாக்கியத்தை முடிக்கிறது.

பாதிப் பயணத்தில் மாலுமிகள் கலகம் செய்து தங்கள் அதிகாரிகளைக் கொலை செய்தனர்.

ஜூரிகள் தங்கள் தீர்ப்பைக் கூறினர்.

3.2.10 பெயர்ப்பதிலிகள் (pronouns)

ஆங்கிலத் தற்சுட்டுப் பெயர்ப்பதிலிகளான (reflexive pronouns) myself, yourself, himself, herself, itself, ourselves, yourselves, themselves ஆகியவை தமிழில் பெயர்க்கப்படும் பொழுது, கீழ்க்காணும் விதமாய் அமைகின்றன.

ஆங்கிலம்	தமிழ்
I hurt myself	என்னை நானே துன்புறுத்திக் / காயப்படுத்திக் கொண்டேன்
You hurt yourself	உன்னை நீயே துன்புறுத்திக் கொண்டாய்
He hurt himself	அவன் தன்னைத்தானே துன்புறுத்திக் கொண்டான்
She hurt herself	அவள் தன்னைத்தானே துன்புறுத்திக் கொண்டாள்
The cow hurt itself	பசு தன்னையே துன்புறுத்திக் கொண்டது
We hurt ourselves	எங்களை நாங்களே துன்புறுத்திக் கொண்டோம்
You hurt yourselves	உங்களை நீங்களே துன்புறுத்திக் கொண்டீர்கள்

They hurt themselves	அவர்கள் தங்களைத் தாங்களே துன்புறுத்திக் கொண்டார்கள்.

ஆங்கிலத்தின் உறுதி சுட்டும் பெயர்ப்பதிலிகளைக் (emphatic pronouns) கீழ்க்காணும் நிகரன்களால் மொழிபெயர்க்கிறோம்.

ஆங்கிலம்	தமிழ்
I myself saw his steal	அவன் திருடியதை நானே பார்த்தேன்
I will do it myself	நானே அதைச் செய்வேன்
We will look after the baby ourselves	நாங்களே குழந்தையைப் பார்த்துக் கொள்வோம்.
She herself says so.	அவளே அப்படிச் சொல்கிறாள்.
The town itself is not very large.	அந்த நகரம் தன்னளவில் அவ்வளவு பெரியது இல்லை.
The teacher himself said.	ஆசிரியரே சொன்னார்
They themselves admitted their guilt.	அவர்களே தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள்

One, none, all, some, somebody, nobody, few. many, anybody, everybody, everyone, anyone, whoever, whomsoever ஆகிய வரம்பிலாப் பெயர்ப்பதிலிகள் (indefinite pronouns) தமிழில் கீழ்க்காணுமாறு உணர்த்தப்படுகின்றன.

ஆங்கிலம்	**தமிழ்**
One must not boast of one's own success.	ஒருவன் தனது வெற்றியைப் பற்றித் தானே புகழக்கூடாது.
None of his poems are well known.	அவரது கவிதைகளில் எதுவும் பிரபலமாகவில்லை.
All were welcome.	எல்லாரையும் வரவேற்றார்கள்.
Some are born poets.	சிலர் பிறவிக் கவிஞர்கள்.
Somebody has stolen my book.	யாரோ எனது புத்தகத்தைத் திருடி விட்டார்கள்.
Nobody was there to receive the guests.	விருந்தினரை வரவேற்க அங்கே யாரும் இல்லை.

Few escaped unhurt.	சிலர் காயமில்லாமல் தப்பினார்கள்.
Many of them were students	அவர்களில் பலர் மாணவர்கள்.
We did not see any of them again.	அவர்களில் யாரையும் நாங்கள் மீண்டும் பார்க்கவில்லை.
Is there anybody who has a guitar?	யாராவது கிடார் வைத்திருக்கிறீர்களா?
Is there anyone who wants coffee?	யாருக்காவது காப்பி வேண்டுமா?
Everyone should bring lunch with you.	எல்லோரும் பகலுணவைக் கொண்டு வந்துவிட வேண்டும்.
whomsoever concerned.	சம்பந்தப்பட்டவருக்கு
Whoever believes will benefit.	நம்புகிற யாரும் நன்மை பெறுவாரக்ள்.

Who, Which, that என்ற தழுவுப் பெயர்ப்பதிலிகளையும் (relative pronouns), who என்பதன் வேற்றுமை ஏற்கத் திரிந்த வடிவங்களாகிய whose, whom ஆகியவற்றையும் பற்றி அறிதல் ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்புக்கு இன்றியமையாதது. ஏனென்றால் இவற்றைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் நீண்ட பின்னல் வாக்கியங்கள் அமைகின்றன. இவற்றுக்கு நேர் இணையான நிகரன்கள் தமிழில் இல்லை. ஆனால் இவை உணர்த்தும் கருத்தைத் தமிழில் மிகத் துல்லியமாகப் புலப்படுத்திவிட முடியும்.

ஆங்கிலம்	தமிழ்
This is the child who wanted to see you.	உன்னைப் பார்க்க விரும்பிய குழந்தை இதுதான்.
This is the girl whose sister studied here last year.	சென்ற ஆண்டு இங்கு படித்த பெண்ணின் தங்கை இவள்தான்.
Valluvan is the sage whom I admire.	நான் போற்றும் ஞானி வள்ளுவர்.
This is the house which was built by my father	இது என் தந்தை கட்டிய வீடு.
Take anything that you like.	நீ விரும்பும் எதையும் எடுத்துக்கொள்.

3.2.11. தொழிற்பெயர்கள்

ஆங்கிலத் தொழிற் பெயகளைத் (gerands) தொழிற்பெயராகவே தமிழிலும் தர முடியும்.

ஆங்கிலம்	தமிழ்
He is fond of reading.	வாசிப்பது அவனுக்கு மிகவும் பிடிக்கும்.
He was punished for telling a lie.	பொய் சொன்னதற்காக அவன் தண்டிக்கப்பட்டான்.

சில இடங்களில் ஆங்கிலத் தொழிற்பெயர் தமிழில் அடுக்கு வினையால் சிறப்பாக உணர்த்தப்பெறுவதும் உண்டு.

I am tired to waiting.

காத்துக்காத்து நான் சோர்ந்து போனேன்.

3.2.12 செயப்பாட்டு வினை

ஆங்கிலத்தில் செயப்பாட்டுவினை வழக்கு மிகுதி. தமிழில் அவை அருகியே வரும். ஆங்கிலத்தின் பெரும்பான்மையான செயப்பாட்டு வினை வழக்குகளைத் தமிழில் செய்வினை வழக்குகளாக மாற்றுவதே சிறப்பு. அதுதான் தமிழ் வாசகர் செவிக்கு இயல்பாக அமையும்.

ஆங்கிலம்	தமிழ்
I was asked many questions by the inspector	நான் இன்ஸ்பெக்டரால் பல கேள்விகள் கேட்கப்பட்டேன்– மொ.பெ. 1
	இன்ஸ்பெக்டர் என்னிடம் பல கேள்விகள் கேட்டார் – மொ.பெ. 2
Tickets are issued.	டிக்கட் கொடுக்கப்படுகிறது – மொ.பெ. 1
	டிக்கட் கொடுக்கிறார்கள் – மொ.பெ. 2

இவற்றுள் மொ.பெ. 2 தான் தமிழ் வாசகருக்கேற்ற மொழிபெயர்ப்பாதல் தெளிவு. பத்து தினமணி இதழ்களின் மொழிபெயர்ப்புச் செய்திகளை ஆராய்ந்ததில் 19.51 சதவிகிதம் ஆங்கில செய்வினை வாக்கியங்கள் தமிழில் செயப்பாட்டு வினை

வாக்கியங்களாகவும், 80.49 சதவிகிதம் ஆங்கில செயப்பாட்டு வினை வாக்கியங்கள் தமிழில் செய்வினை வாக்கியங்களாகவும் மாற்றம் பெற்றுள்ளதாகக் கணித்துள்ளனர்.

மேலும் செயப்படுபொருள் வினைமுதல் போல் அமைவதும் தமிழ் வழக்கில் உண்டு.

நெய் விற்கிறது.

பூ விற்கிறது

இந்த மரபே தமிழ் மொழிபெயர்ப்பில் மேலாண்மை பெற வேண்டும்.

ஆங்கிலம் : Sarees are sold here at reduction rate.

தமிழ் : தள்ளுபடி விலையில் இங்கே சேலைகள் கிடைக்கும்.

ஆங்கிலம் : The glass windows were brokedn in a riot yesterday.

தமிழ் : நேற்றைய கலகத்தில் கண்ணாடி சன்னல்கள் உடைந்தன.

3.2.13 இயக்குவினை

இயக்குவினையை (Causative Verb) தன்வினையாகக் கூறும் வழக்கு தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் பொதுவானது.

Shawjahan built Tajmahal

ஷாஜஹான் தாஜ்மஹாலைக் கட்டினார்

(தாஜ்மஹாலைக் கட்டுவித்தவர்தான் ஷாஜஹான. கட்டியவர் அல்லர்)

Herod slew the children in Bethlahem.

ஏரோது பெத்லகேமிலிருந்த குழந்தைகளைக் கொன்றான்

(ஏரோது கொல்வித்தவன்)

ஒரே வடிவம் தன்வினைப் பொருளிலும், இயக்குவினைப் பொருளிலும் வரும் வழக்கு ஆங்கிலத்தில் காணப்படுகிறது.

(எ–டு.)

The horse walks.	He walks the horse.
She ran down the street.	She ran a needle into her finger.
Birds fly.	The boy fly their kites.

இத்தகு வழக்குகளில் ஒரு மொழிபெயர்ப்பாளர் மிகவும் கவனமுள்ளவராயிருக்க வேண்டியுள்ளது.

1. He married Mala என்ற வாக்கியத்தில் வரும் married என்ற சொல்லையும்,

2. He married his daughter to Raju என்ற வாக்கியத்தின் married என்ற சொல்லையும் ஒரே மாதிரியாகத் தன்வினைப் பொருளில் மொழிபெயர்த்தால், அது பிரளயப் பிழையிகிவிடும். ஏனென்றால் 1. தன்வினை வாக்கியம், 2. இயக்குவினை வாக்கியம்.

3.2.14. வரம்பிலா வினை (infinitive)

ஆங்கிலத்தில் வரம்பிலா வினை வேறு வேறு செயற்பாடுகளில், வருகிறது. அது வருமிடங்களின் செயற்பாட்டுக்கேற்பத் தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது.

ஆங்கிலம்	தமிழ்
To err is human.	தவறு செய்வது மனித இயல்பு (தொழிற்பெயர்)
Kanaga wants to play.	கனகா விளையாட விரும்புகிறாள். (வினையெச்சம்)

'to' என்பதில்லாமலும் ஆங்கிலத்தில் வரம்பிலாவினை வழங்கும்.

Let him listen first.

Make him study.

I saw him laugh

You need not wait.

you better ask permission.

இவை தமிழில் முறையே கீழ்க்காணுமாறு அமையும்.

அவன் முதலில் கவனிக்கட்டும்.

அவனைப் படிக்கவை.

அவன் சிரிப்பதைப் பார்த்தேன்.

நீ காத்திருக்க வேண்டியதில்லை.

எதற்கும் நீ அனுமதி பெறுவது நல்லது.

3.2.15 இணைப்பான்கள் (Conjunction)

and, but, or போன்றவை இரு வாக்கியங்களை இணைக்கும் ஆங்கில இணைப்பாண்கள். இவை தமிழில் இடத்துக்கேற்றபடி வேறுவேறு பதிலீடுகளைப் பெறுகின்றன.

Ramu and Rangan are good students.

ராமுவும் ரங்கனும் நல்ல மாணவர்கள்.

ஆங்கிலம் and ⟷ உம்... உம்... / தமிழ்

God made the country and man made the town.

கடவுள் கிராமத்தைப் படைத்தார்; மனிதன் நகரத்தை படைத்தான்.

ஆங்கிலம் and ⟷ / / தமிழ்

You should choose blue or red.

நீலம் அல்லது சிவப்பை நீ தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆங்கிலம் or ⟷ அல்லது / தமிழ்

She must weep or she will die.

அவள் அழ வேண்டும். இல்லாவிட்டால் அவள் இறந்துவிடுவாள்.

ஆங்கிலம் or ⟷ இல்லாவிட்டால் / தமிழ்

இணையாக வரும் ஆங்கில இணைப்பான்களாகிய (Correlative conjunctions) either... or, neither... nor, whether...or, not only... but also போன்றவை தமிழில் வருமாறு :

ஆங்கிலம்	தமிழ்
Either take it or leave it.	எடு அல்லது விடு.
She is neither good nor intelligent.	அவள் நல்லவளுமில்லை புத்திசாலியுமில்லை.
He is not only foolish, but also lazy.	அவன் முட்டாள் மட்டுமில்லை, சோம்பேறியும் கூட.

In order that, on condition that, even if, so that, provided that, as though, in as much as, as well as, as if போன்ற கூட்டு இணைப்பான்களின் (Compound conjunctions) வருமிடம் நோக்கித் தமிழ் நிகரன்கள் அமைகின்றன. சில எடுத்துக்காட்டுகள் :

ஆங்கிலம்	தமிழ்
I forgive you on condition that you do not repeat the offence.	நீ மீண்டும் இந்தத் தவற்றைச் செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், நான் உன்னை மன்னிக்கிறேன்.
you can borrow the book provided that you return it soon	சீக்கிரமாகத் திருப்பித் தருவதானால், நீ இப்புத்தகத்தை இரவல் பெறலாம்.
He pretended as if he were innocent.	ஒன்று மறியாதவன் போல அவன் நடித்தான்.

3.2.16. வினா வாக்கியங்கள்

பொதுவாக வினாக்களின் தன்மை பதில் நோக்குவது. பதில் நோக்கா வினாக்களும் (rhetorical questions) உண்டு.

எ–டு.

Am I not a good man? Trust me.

நான் நல்லவன் இல்லையா? என்னை நம்பு.

பதில் நோக்கா வினாக்களின் செயற்பாடு வருமாறு :

எதிர்மறை அல்லது உடன்பாட்டை வெளியிடுவது

கவனத்தைக் கவர்வது

ஆர்வத்தைத் தூண்டுவது

சிந்திக்க வைப்பது.

எழுதுபவன் / பேசுபவன் தன் கருத்தை வாசகர் / கேட்போருக்கு அறிவிப்பது.

ஒரு மொழிபெயர்ப்பாளன் இருவகை வினாக்களையும் இனங்கண்டு மொழிபெயர்க்க வேண்டும்.

3.2.17 எதிர்மறைகளால் உடன்பாடு

இரண்டு எதிர்மறைகளால் உடன்பாட்டுப் பொருளை உணர்த்தும் வழக்கு ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் பொதுவானது.

சொல்லவந்ததை அழுத்தமாகவும், வாசகர் கவனத்தைக் கவருமாறும், அவர்தம் உள்ளத்தில் பதியுமாறும் கூறுவதற்கு இந்த உத்தி

பயன்படுகிறது. இவ்விதம் எதிர்மறைகளால் உடன்பாடு உணர்த்தும் வாக்கியங்களை மூலத்திலிருந்து மொழிபெயர்க்கும் போது, அவற்றுக்கு இணையான பெறும்மொழியின் எதிர்மறைகளால் உடன்பாடு உணர்த்தும் வாக்கியங்களையே கையாள்வது சிறப்பு. பொருள் மயக்கம் ஏற்படும் வாய்ப்பு உள்ள இடங்களில் மட்டும் சாதாரண வாக்கியங்களைக் கையாளலாம்.

ஆங்கிலம்	தமிழ்
There was hardly a slum she had not passed through.	அவள் கால்படாத சேரியே இல்லை.
No stone is left unturned.	செய்யாத முயற்சி இல்லை.
He could not but accept the truth	உண்மையை அவனால் ஏற்றுக் கொள்ளாமலிருக்க முடியவில்லை.
They were not a little comforted.	அவர்கள் அடைந்த ஆறுதல் கொஞ்சநஞ்சமல்ல.

பொருள் தெளிவிற்காகச் சாதாரண வாக்கியத்தைக் கையாளுமிடத்திற்குச் சான்று :

He did not speak to them without parables.

உவமைக் கதைகள் இல்லாமல் அவர் அவர்களுடன் பேசவில்லை
– மொ.பெ.1

உவமைக் கதைகள் மூலமாகவே அவர் அவர்களுடன் பேசினார்
– மொ.பெ.2

இவற்றுள் மொ.பெ. 2 பொருளைத் தெளிவாகத் தருவது வெளிப்படை.

3.2.18. இணைவமைதி (Collocation)

சொற்கள் இணைந்து வருவதிலும் மொழிகளில் ஒரு வரன்முறை உண்டு. சில இணைகள் மொழியில் பெருவழக்காய் வருகின்றன. சில இணைகள் அருகியே வழக்குகின்றன. சில சொற்கள் இணைவதே இல்லை.

தமிழில் வெயில் காய்கிறது என்பதற்கு இணையாக நிலா காய்கிறது என்ற வழக்கு உள்ளது.

ஆனால்

வெயில் அடிக்கிறது என்பதற்கு இணையாக
நிலா அடிக்கிறது என்ற வழக்கு இல்லை.

மழை கொட்டுகிறது என்பதற்கு இணையாக
தண்ணீர் கொட்டுகிறது என்ற வழக்கு உள்ளது.

ஆனால்

மழை பெய்கிறது என்பதற்கு இணையாக
தண்ணீர் பெய்கிறது என்ற வழக்கு இல்லை.

சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.
கோபம் பொத்துக் கொண்டு வந்தது என்று சொல்கிறோம்.

ஆனால்

அழுகை பொத்துக் கொண்டு வந்தது
என்று சொல்வதில்லை.

அழுகை வெடித்துக்கொண்டு வந்தது
என்றுதான் கூறுகிறோம்.

இவ்விதம் சொற்கள் சில சொற்களுடனேயே மிகுதியும் சேர்ந்து வரும் வழக்கினைச் சொற்களின் இணைவமைதி (collocation) என்பர். தாய்மொழியாளர்கள் (native speakers) சொற்களின் சரியான இணைகளை மிக எளிதாகத் தேர்ந்து பயன்படுத்துவர். ஆனால் தாய்மொழியாளர் அல்லாதார் சொல் இணைகளைத் தேர்வதில் பிழை செய்ய நேர்வதுண்டு. சான்றாக,

ஆங்கிலத்தில்	head of the table foot of the tree என்பவை வழக்கு
ஆனால்	head of the tree foot of the table என்பவை வழக்கல்ல.

தமிழில் வந்தான், சென்றான் என்ற சொற்கள் ஒரே பொருளில் வழங்குமிடங்கள் உண்டு.

என்னிடம் வந்தான்.
அவனிடம் சென்றான்.

இவற்றை

என்னிடம் சென்றான் என்றோ
அவனிடம் வந்தான் என்றோ

மாற்றி வழங்குவது வழுவாகும்.

ஒரு மொழிபெயர்ப்பாளன் மூலமொழி, பெறும்மொழி ஆகியவற்றின் இணைவமைதிகளைத் தெரிந்திருத்தல் அவசியம்.

எந்தப் பெயர் எந்த வினைகொண்டு முடிய வேண்டும் என்ற வரன்முறைமைய மொழி மீறுமிடங்களும் உண்டு.

பேனாவைப் பிடுங்கினான்.

புத்தகத்தைப் பிடுங்கினான்.

பையைப் பிடுங்கினான்

என்ற இணைகள் ஏற்புடையன. ஆனால்

குளத்தைப் பிடுங்கினான் (1)

தரையைப் பிடுங்கினான் (2)

என்பன பிழையான இணைகள். இவைபோல் வாயைப் பிடுங்கினான் (3) என்பதும் பிழையான இணையே. ஆனால் வாயை, பிடுங்கினான் என்ற இரண்டு சொற்பொருளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட இன்னொரு பொருளை அதாவது ஒருவரிடம் பேச்சுக் கொடுத்து அவரறியாமல் செய்தியைக் கூறவைத்தல் என்ற பொருளை வாயைப் பிடுங்கினான் என்ற இணை தருகிறது. இதனால் இது சிறப்பு வழக்காகிறது (idioim). விதி மீறிய இணைகள் அனைத்தும் சிறப்பு வழக்காவதில்லை. மேற்சுட்டிய (1) (2) ஆகியவை சிறப்பு வழக்குகளில்லை. (3) மட்டுமே சிறப்பு வழக்கு.

கவிஞர்களும் பிற இலக்கியப் படைப்பாளிகளும் விதி மீறிய இணைகளைக் கையாளும் சுதந்திரம் பெற்றுள்ளனர். அது கட்டற்ற சுதந்திரமன்று. சில இடங்களில் இலக்கண விதிகளை மீறுவதன் மூலம் கவிஞன் மொழிக்கு ஆற்றலூட்டுகிறான். அதனால் அந்த விதிமீறலை மக்கள் ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாமல், அதைப் பாராட்டிப் போற்றவும் செய்கின்றனர்.

"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லூற்று"

என்கிறான் வள்ளுவன். கண்ணுக்குத் தின்னும் வினை இல்லை.

நெஞ்சுக்கும் செல்லும் வினை இல்லை. இணையல்லாத இணையைக் கையாள்வதன் மூலம் தலைவனைக் காணத் தவிக்கும் தலைவியின் நிலையை மிக ஆற்றலுடன் உணர்த்திவிடுகிறான் கவிஞன். மூலத்தில் இடம்பெறும் இதுபோன்ற இணைகளை ஒரு மொழிபெயர்ப்பாளன் தவறவிட்டு விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

3.2.19 உளப்பாட்டுத் தன்மைப்பன்மை

ஆங்கிலத்தில் உளப்பாட்டுத் தன்மைப்பன்மையைக் குறிக்கத் தனியாக ஒரு சொல் இல்லை. ஆனால் தமிழில் உண்டு. நாங்கள் என்பது முன்னிலையில் உள்ளவரை உளப்படுத்தாத தன்மைப் பன்மைச் சொல். நாம் என்பது முன்னிலையில் உள்ளவரை உளப்படுத்தும் தன்மைப்பன்மைச் சொல். இவ்விரண்டு பொருளையும் உணர்த்த ஆங்கிலத்தில் we என்ற ஒரு சொல்லே பயன்படுத்தப்படுகிறது. எனவே we என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் பெயர்க்குபோது, சூழல் அறிந்து நாங்கள் என்றோ நாம் என்றோ பதிலீடு (substitute) செய்ய வேண்டும்.

தன்மதிப்பிட்டு வினா 5

We என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது எவ்வாறு மொழி பெயர்க்க வேண்டும்?

3.2.20 மரியாதை வழக்குகள் (honorifics)

ஆங்கிலத்தில் மரியாதைப் பன்மை உருபன்கள் இல்லை; தமிழில் உண்டு. அவன், அவள் என்பவை சாதாரண சுட்டு வழக்குகள். அவர் என்பது சுட்டப்படுபவரை மரியாதைக்குரியவராய் உயர்த்திக் காட்டும். ஆங்கிலத்தில் அவன், அவர் என்ற இரண்டுக்கும் இணையாக he என்பது மட்டுமே உள்ளது. அவள், அவர் என்ற இரண்டுக்கும் இணையாக She என்பது மட்டுமே உள்ளது. எனவே, ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்பில் சூழலறிந்து he என்பதற்கு அவன் அல்லது அவர் என்பதைப் பதிலீடு செய்ய வேண்டும். she என்பதற்கு அவள் அல்லது அவர் என்பதைப் பதிலீடு செய்ய வேண்டும். அப்படியே you என்பதற்கு நீ அல்லது நீங்கள் அல்லது தாங்கள் (அதிக மரியாதை உணர்த்துவது) என்பதைப் பதிலீடு செய்ய வேண்டும்.

பைபிள் போன்ற மிகப்பழையதும், வேறுபட்ட கலாச்சாரப் பின்புலத்தையுடையதுமான நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும் போது, மரியாதைப் பன்மைகளைக் கையாளுவதில் பெரும் சிக்கல் ஏற்படுகிறது. இதனைப் பைபிள் மொழிபெயர்ப்பாளர்கள் உணர்கின்றனர்.

தன்மதிப்பிட்டு வினா 6. 'தமிழ் மொழியின் சிறப்புப் பண்புகளில் ஒன்று' என்று வீ.மீ.ஞானப்பிரகாசம் எதனைக் குறிப்பிடுகிறார்?

'தமிழ் மொழியின் சிறப்புப் பண்புகளில் ஒன்று மரியாதைப் பன்மை கொண்டிருப்பதாகும். அச்சிறப்பைக் காப்பாற்றுவது விவிலிய (Bible) மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும். இது கசப்பான உண்மையெனினும். அது கடமையே' என்பார் அருள் தந்தை வீ.மீ.ஞானப்பிரகாசம் அவர்கள்.

சமூக நிலையில் உயர்ந்தோரிடம் பேசும்போது ஒரு வழக்கு, கீழ்நிலையில் இருப்போரிடம் பேசும்போது ஒரு வழக்கு, சமநிலையில் இருப்போரிடம் ஒரு வழக்கு என்று பல சொற்கள் சில மொழிகளில் உள்ளன. தொல்காப்பியத் தமிழில் இடம்பெறும் ஈ, தா, கொடு என்னும் சொற்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இன்றையத் தமிழ் வழக்கின் தாங்கள், நீங்கள், நீ போன்ற சொற்களும் இதனுள் அடங்கும். இப்படி மரியாதை அளவு சுட்டும் சொற்கள் மொழிக்கு மொழி வேறுபடுவது மட்டுமின்றி, ஒரே மொழியிலும் காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன. சில மொழிகளில் இத்தகு வழக்குள் இல்லை. இச்சொற்கள் மொழிபெயர்ப்பாளனுக்குத் தலைவேதனை தரும்மிடங்கள் உண்டு.

இயேசு பெருமான் வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீன மதகுருக்கள் அவரை உயர்வழக்குச் சொற்களால் அழைத்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், அவர் மதகுருக்களை உயர்வழக்குச் சொற்களாலேயே அழைத்திருக்க வேண்டும். ஆனால், இன்று கிறிஸ்துவத் திருமறை மொழிபெயர்க்கப்படும் மொழிகளில் கிறிஸ்துவைக் குறிக்குமிடங்களில் உயர் வழக்குச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. இல்லையெனில் அம்மொழிபெயர்ப்பு போற்றுவாரற்றுப் போகும். எனவேதான் ஒரு மொழிபெயர்ப்பு வாசகர்களுக்காகச் செய்யப்படுவது என்பதை மனதில் கொண்டு செயற்பட வேண்டும் என்று வற்புறுத்துவார் நைடா.

3.2.21 உம்மை வழக்கு

இத்துணை என்று வரையறுக்கப்பட்ட சினைச் சொல்லுக்கும், முதற்சொல்லுக்கும் தமிழில் உம்மை கொடுத்து வழங்க வேண்டும்.

கண்கள் இரண்டும்

ஐந்து பேரும்

இவை ஆங்கிலத்தில் பின் வருமாறு அமையும் :

both the eyes

all the five

சில அறுதியிட்ட மெய்ம்மைகளைக் (facts) கூறுமிடத்தும், உம்மை சேர்த்துக் கூறுதல் தமிழ் வழக்கு.

உண்மை ஒருபோதும் தோற்பதில்லை.

கடவுளை ஒருக்காலும் ஒருவரும் கண்டதில்லை.

இவை ஆங்கிலத்தில் வருமாறு :

Truth never fails

No man has ever seen God.

3.2.22 ஒப்பீடு (Comparison)

பொருள்களின் தன்மைகளை ஒப்பிடவும், நிகழ்ச்சிகளை ஒப்பிடவும் - er, est என்று கட்டுருபன்களும்,

much - more - most, as, than

என்ற சொற்களும் ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றின் பொருளைத் தமிழில் போல, காட்டிலும், மிக, –உம், –ஏ போன்ற வடிவங்கள் மிக ஆற்றலுடன் புலப்படுத்துகின்றன.

ஆங்கிலம்	தமிழ்
My father is as good as my mother.	என் தந்தை என் அன்னையைப் போலவே நல்லவர், / என் அன்னையைப் போல் என் தந்தையும் நல்லவர்.
Einstein is as famous as Newton.	ஐன்ஸ்டீனும் நியூட்டனைப் போலவே புகழ்பெற்றவர்.
It is better to starve than beg.	பிச்சை எடுப்பதைக் காட்டிலும் பட்டினி கிடப்பது நல்லது.
Iron is more useful than any other metal.	இரும்பு மற்றெந்த உலோகத்தைக் காட்டிலும் பயனுள்ளது.
Australia is the largest Island	ஆஸ்திரேலியா மிகப்பெரிய தீவு.
Tirukkural is the most valuable book.	திருக்குறள் மிகவும் மதிப்புள்ள நூல்.

3.3 இலக்கண மாற்றம் (Grammatical Shift)

ஒரு மொழியில் உள்ள பல்வே றுவடிவங்களும், அவை இணைந்து செயற்படும் விதிமுறைகளுமே அம்மொழியின் இலக்கணமாகும். பெயர், வினை, பெயரடை, வினையடை போன்ற சொல் வகைகள் (word class) திணை, பால், எண், இடம், காலம் ஆகிய வகையன்கள் (categories), சொல்நிரல் (word-order), எழுவாய் – பயனிலை இயைபு (concord)

போன்ற வாக்கிய அமைப்புகள், சொற்களின் புணர்ச்சி, சொற்களில் எழுத்துக்களின் சேர்க்கை ஆகியவை அனைத்தும் இதற்குள் அடங்கும். ஒரு மொழியானது ஓர் இலக்கணக் கூறு கொண்டு உணர்த்தும் பொருளை இன்னொரு மொழியானது வேறொரு இலக்கணக் கூறு கொண்டு உணர்த்தலாம்.

சான்றாக,

ஆங். : I do not care ⟷ எனக்குக் கவலை இல்லை / தமிழ்

தன்மதிப்பீட்டு வினா 7

இலக்கண மாற்றம் என்றால் என்ன?

என்ற மொழிபெயர்ப்பைக் காண்க. ஆங்கிலத்தில் care என்னும் வினைச்சொல் உணர்த்தும் பொருளைத் தமிழில் கவலை என்ற பெயர்ச்சொல் உணர்த்துகிறது. மொழிபெயர்ப்பில் நிகழும் இத்தகைய மாற்றத்தை இலக்கண மாற்றம் (grammatical shift) என்கிறோம்.

ஆங். : Take down my dictation ⟷ நான் சொல்லச் சொல்ல எழுது / தமிழ்

இங்கு ஆங்கில மூலத்தின் dictation என்ற பெயர்ச்சொல்லுக்குத் தமிழில் சொல்லச் சொல்ல என்ற அடுக்கு வினைச்சொல் நிகரனாகிறது. இதைக் கீழ்காணும் குறியீட்டால் சுட்டலாம்.

ஆங். : பெயர் ⟷ வினை / தமிழ்

இலக்கண மாற்றத்திற்கு மேலும் சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காண்க :

ஆங். : I saw him laugh. ⟷ அவன் சிரிப்பதைப் (சிரிப்பது+ஐ) பார்த்தேன் / தமிழ்

ஆங். : வினை ⟷ தொழிற்பெயர் / தமிழ்

ஆங். : This is the college where I studied.

இதுதான் நான் படித்த கல்லூரி / தமிழ்

ஆங். : தழுவுபெயர்ப்பதிலி (relative pronoun) + வினை ⟷ பெயரடை / தமிழ்

ஆங். : The entire village was destroyed by earth quake.

⟷ நிலநடுக்கத்தால் கிராமம் முழுவதும் அழிந்தது / தமிழ்

ஆங். : செயப்பாட்டு வினை ⟷ செய்வினை / தமிழ்

3.3. தன்மதிப்பீட்டு வினா விடை குறிப்புகள் :

வினா 1 பகுதி 3.1 ஐப் பார்க்க

வினா 2 பகுதி 3.1.2 ஐப் பார்க்க

வினா 3 பகுதி 3.2.1 ஐப் பார்க்க

வினா 4 பகுதி 3.2.2 ஐப் பார்க்க

வினா 5 பகுதி 3.2.19 ஐப் பார்க்க

வினா 6 பகுதி 3.2.20 ஐப் பார்க்க

வினா 7 பகுதி 3.3 ஐப் பார்க்க

3.4 தொகுப்புரை :

இப்பாடத்தில் பல்வேறுபட்ட மொழி வழக்குகளை மொழிபெயர்க்கும் முறைகளை அறிந்து கொண்டீர்கள். இலக்கணத்தைத் தகவுற அமைத்தல் என்றால் என்ன என்பதைக் குறித்து விரிவாக அறிந்து கொண்டோம். இலக்கணமாற்றம் என்றால் என்ன என்றும் அறிந்துகொண்டோம்.

3.5 கலைச்சொற்கள் :

இப்பாடத்தில் நாம் அறிந்து கொண்ட கலைச்சொற்கள் பின்வருமாறு:

சொற்றொகுதி (ஒரு மொழியின்)		Vocabulary
தனிச்சிறப்புத் தன்மை	–	genius of a language
சிறப்பு வழக்கு	–	idiom
அணிநல வழக்கு	–	figuretive usage
கலாச்சார இடைவெளி	–	cultural gap
குறியீட்டுச் செயல்	–	symbolic action
உரைமை	–	communicatin / expression (through language)
செயற்கை மொழி	–	artificial language
மொழியியல் அல்லாத கூறு	–	extra linguistic factor
கருத்து நிகரன்	–	concept equivalent
சொல் நிகரன்	–	word equivalent

சொற்களின் வரிசை முறை	–	word order
தொடர்நிலை	–	phrase level
தொகைப் பெயர்	–	collective noun
பொதுப் பெயர்	–	common noun
நீக்கம்	–	deletion
சேர்க்கை	–	addition
பெயர்ப்பதிலி	–	pronoun
உறுதிசுட்டும் பெயர்ப்பதிலி	–	emphatic pronoun
வரம்பிலாப் பெயர்ப்பதிலி	–	indefinite pronoun
தழுவுப் பெயர்ப்பதிலி	–	relative pronoun
தொழிற்பெயர்	–	gerand
செயப்பாட்டு வினை	–	passive voice
இயக்குவினை	–	causative verb
வரம்பிலா வினை	–	infinitive
இணைப்பான்	–	conjunction
பதில் நோக்காவினா	–	rhetorical question
இணைவமைதி	–	collocation
மரியாதை வழக்குகள்	–	honorefics
இலக்கண மாற்றம்	–	grammatical shift

3.6 பயிற்சி வினாக்கள் :

1. மொழிபெயர்ப்பில் சிறப்பு வழக்குகள், கலாச்சார வழக்குகள் இவற்றை அறிவதன் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.
2. மொழிபெயர்க்கும் போது மொழிகளின் இலக்கண அமைப்பு வேறுபடுமாற்றை ஆங்கிலம் தமிழ்ச் சான்றுகள் மூலம் விளக்குக.
3. பெறுமொழிகளின் இலக்கண அமைப்புக்கேற்ப மொழிபெயர்க்கும் விதிமுறைகளை விளக்குக.
4. உவம, உருவக வழக்குகளை ஆற்றலுடன் மொழி பெயர்க்கும் முறையைச் சான்றுகள் தந்து விளக்குக.

5. மொழிபெயர்ப்பில் கலாச்சார வழக்குகள் பெறுமிடம் குறித்து எழுதுக.

6. ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்பில் பதிலிகளைக் கையாளும் முறை குறித்து எழுதுக.

7. ஆங்கிலம் – தமிழ் மொழி பெயர்ப்பில் செயப்பாட்டுவினை எவ்வாறு மொழிபெயர்க்கப்படுகிறது?

8. இணைவமைதி என்றால் என்ன? விளக்குக.

9. தமிழ் மரியாதை வழக்குகளால் மொழிபெயர்ப்பில் எற்படும் சிக்கல்களை விளக்குக.

அலகு 4. பொருளைப் பொருத்தமுற அமைத்தல் - சொல்லாக்கம்

அறிமுகம்

மொழிபெயர்ப்பில் பொருளைப் பொருத்தமுற அமைத்தல் என்பது குறித்து இப்பாடம் அமைகிறது. இப்பாடத்தில் சொல்லாக்கம் குறித்தும் காணலாம்.

நோக்கம் :

1. பலபொருள் ஒரு சொல், ஒரு பொருட் பன்மொழி, ஒரே பொருட்களத்தில் அமையும் சொற்கள், உணர்வுப் பொருட் சொற்கள், உருவகச் சொற்கள் ஆகியவற்றைப் பொருள்மயக்கமின்றி மொழி பெயர்க்கும் முறைகளை அறிதல்

2. ஆங்கிலம் – தமிழ்ச் சொல்லாக்க வடிவமைப்பினை அறிதல்

பாட அமைப்பு

4.1 பொருளைப் பொருத்தமுற அமைத்தல்

- 4.1.1 பல பொருள் ஒரு சொல்
- 4.1.2 ஒரு பொருட் பன்மொழி
- 4.1.3 ஒரே பொருட்களத்தில அமையும் சொற்கள்
- 4.1.4 உணர்வுப் பொருள்
- 4.1.5 குறுக்கீட்டுறழ்வு
- 4.1.6 பொருள் மயக்கம்

4.2 சொல்லாக்கம்

- 4.2.1 உருபன்
- 4.2.2 சொல்லாக்க வடிவமைப்பு
- 4.2.3 புதுமையாக்கம்
- 4.2.4 சொல்வகை
- 4.2.5 நேர்வடிவமும் எதிர்மறை வடிவமும்
- 4.2.6 புதிய தேவைக்குப் பழைய சொல்
- 4.2.7 சொற்பொருள் விரிவாக்கம்
- 4.2.8 அறிவியல் கலைச்சொற்கள்

4.3 தன் மதிப்பீட்டு வினா விடைக்குறிப்பு

4.4 தொகுப்புரை

4.5 கலைச் சொற்கள்

4.6 பயிற்சி வினாக்கள்

4.1.1. பலபொருள் ஒரு சொல் (Homonym)

தன் மதிப்பீட்டு வினா 1 பல பொருள் ஒரு சொல் என்றால் என்ன? சான்று தருக.

ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குட்பட்ட சொற்களையே பயன்படுத்துகிறான். ஆனால் இச்சொற்கள் மூலம் அவன் வெளிப்படுத்துகிற செய்திகளும், அனுபவங்களும், உணர்வுகளும், எண்ணிலடங்காதவை. இதனால் ஒரு சொல் பல பொருளைக் குறிக்கும் நிலை ஏற்படுகிறது. ஒரே சொல் பல பொருளைக் குறிக்கும்போது, கருத்து வெளிப்பாட்டில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் நடைமுறையில் மொழியைப் பயன்படுத்துகிற மக்களிடையே கருத்து வெளிப்பாட்டில் அவ்வளவு குழப்பங்கள் ஏற்படுவதில்லை. இது மொழியின் வியத்தகு தன்மை. இது எப்படிச் சாத்தியமாகிறது? ஒரே சொல் பல பொருளைத் தரும்போது கேட்கிறவர்கள் / படிக்கிறவர்கள் எப்படி எவ்விதக் குழப்பமுமில்லாமல் புரிந்து கொள்கிறார்கள்? பல பொருள் ஒரு சொல் ஒரு குறிப்பிட்ட பொருளை உணர்த்தும் வழிமுறையினை,

"வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே"

என்ற நூற்பாவில் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.

(அ) தண்ணீர்(ர்) குடித்தான்

(ஆ) தண்ணீர்(ர்) போட்டான்

என்ற வாக்கியங்களைக் காண்க.

(அ) வாக்கியத்தில் குடித்தான் என்ற வினையினால் தண்ணீர்(ர்) என்னும் சொல் பருகும் நீரையும்

(ஆ) வாக்கியத்தில் போட்டான் என்ற வினையினால் தண்ணீர்(ர்) என்னும் சொல் மதுவையும் குறிப்பது புலனாகும்.

(இ) மா, பலா, வாழை

என்ற இனச் சொல் தொகுதியில் மா என்னும் சொல்லின் பொருள் விலங்கு அன்று மரம் என்பது தெளிவாய்த் தெரிகிறது. இது இனத்தினால் பெற்ற பொருள்.

(ஈ) குப்பைமேடு

(உ) மணியின் குப்பை

என்னும் வாக்கியங்களைக் காண்க.

(ஈ) வாக்கியத்தில் குப்பை கழிவையும்

(உ) வாக்கியத்தில் குப்பை, திரள்

தன்மதிப்பீட்டு வினா 2

பலபெருள் ஒரு சொல் உணர்த்தும் பொருளை மொழியியலார் எவ்வாறு வகைப்படுத்துவர்?

என்ற பொருளையும் அவை முறையே சார்ந்து வரும் மேடு, மணி என்ற சொற்களால் உணர்த்துகின்றன. இது சார்பினால் பெறும் பொருள். இவ்விளக்கம் நம் இலக்கண நூலார் தருவது. பல பொருள் ஒரு சொல் ஒரு குறிப்பிட்ட பொருளைப் புலப்படுத்துவதைத் தொடரால் பெறும் பொருள் (meaning by syntactic marking) என்றும் அடுத்துவரும் சொற்களின் பொருண்மையால் பெறும் பொருள் (Meaning by Semantic marking) என்றும் வகைப்படுத்துவர் மொழியியலார்.

தொடரால் பெறும்பொருள்

கீழ்க்காணும் வாக்கியங்களைக் காண்க :

Ring the bell	He made an iron ring
Please stop the bus	Drive slow near the bus stop
This horse never kicks	That horse gives kicks
They simply slip down	Many a slip between the cup and the lip
Notice the movement of the dust particles	A notice is being circulated.

இந்த ஆங்கில வாக்கியங்களில் இடம்பெறும் ring, stop, kick, slip, notice ஆகிய சொற்கள் அவை தொடரமைப்பில் வரும் இடத்தைப் பொறுத்துப் பெயராகவும், வினையாகவும் பொருள் தருகின்றன. பேசுவோன் அச்சொற்களால் உணர்த்த விரும்பும் பொருளை அச்சொல்லின் உருவகப் பெருளும் அது தொடரமைப்பில் பெறும் இடத்தால் உணர்த்தப் பெறுகிறது.

அ	ஆ
வசந்தம் பூக்களுக்குப் புதுப்பொலிவு தந்தது	காலங்களில் அவள் வசந்தம்
ஓவியக் கண்காட்சிக்குச் சென்றேன்	கலைகளிலே அவள் ஓவியம்
மார்கழிப் பனியல்லவா?	மாதங்களில் அவள் மார்கழி
மல்லிகையின் மணமே தனி	மலர்களிலே அவள் மல்லிகை

(ஆ) வாக்கியங்களில் இடம்பெறும் வசந்தம், ஓவியம், மல்லிகை என்ற அஃறிணைச் சொற்கள் அவள் என்னும் உயர்திணைச் சொல்லுக்குப் பெயர்ப் பயனிலையாக வருவதால் அவை உருவகப் பொருளின என்பது புலனாகிறது. இது போன்றதோர் அமைப்பு (அ) வாக்கியங்களில் இல்லாததால் அவை அஃறிணைப் பொருளையே காட்டுகின்றன.

தன் மதிப்பீட்டு வினா 3.

உருவகப் பொருள் என்றால் என்ன? சான்று தருக.

அடுத்து வரும் சொற்களின் பொருண்மையால் பெறும் பொருள்

ஒரு சொல்லின் பொருள் அதை அடுத்து வரும் சொல் / சொற்களின் பொருண்மையாலும் தீர்மானிக்கப்பெறுகிறது. இதையே இனத்தினும் சார்பினும் பெறும் பொருள் என்று குறிப்பிட்டார் தொல்காப்பியர்.

(1) His eyes are sharp

(2) The oldman could not see the eye of the needle

என்னும் ஆங்கில வாக்கியங்களுள் (1) இல் eye என்ற சொல் கண்ணையும் (2) இல் eye என்பது ஊசியின் துளையையும் குறிக்கின்றது. (2) இல் eye என்பதன் பொருளை அடுத்து வரும் தொடராகிய of the needle என்பதன் பொருண்மைதான் தீர்மானிக்கிறது. ஒரு சொல் அடுத்து வரும் சொற்களின் பொருளால் வேறுவேறு பொருள்களைத் தருவதற்குக் கீழ்காண்பன போல் பல சான்றுகள் தரலாம்.

1. They charged Rs. 5/- per head
2. He is the head of the famlily
3. The head of the table was covered with a cloth.
4. Head or tail?
5. He had a head injury
6. Nalini has a good head for Mathematics.

இவ்வாக்கியங்களில் Charged Rs. 5/- per. of the family, of the table, or tail, injury, good... for Mathematics ஆகியவை head என்ற சொல்லின் பொருளைத் தீர்மானிப்பது வெளிப்படை.

4.1.2. ஒரு பொருட் பன்மொழி (Synonym)

ஒரு பொருள் பல சொல் வழக்கு ஆங்கிலத்தில் மிகுதி என்பர். ஆனால் அவை வழங்கும் சூழல் ஒரு வரையறைக்கு உட்பட்டது. ஒரு பொருளையுடைய எல்லாச் சொற்களும் எல்லாச் சூழலிலும் வருவதிலை. வரையறுக்கப்பட்ட சூழலிலேயே வழங்குகின்றன.

தன் மதிப்பீட்டு வினா 4. ஒரு பொருட் பன் மொழிக்கு ஒரு சான்று தருக.

anger

fury

indignation

rage

wrath

என்பவை அனைத்தும் கோபம் என்ற ஒரே பொருள் என்றாலும், ஒவ்வொரு சொல்லும் உணர்த்தும் கோபத்தின் அளவும் தன்மையும் வேறுபாடுடையவை. அதற்கேற்ப அவை வழங்கும் சூழலும் வேறுபடுகிறது.

the wrath of God என்பது வழக்கு.

My brother rebuked me in wrath என்பது வழக்கன்று.

கோபம், சினம், வெகுளி, செற்றம் என்ற தமிழ்ச் சொற்களும் கோபத்தின் அளவைப் பொறுத்தே கையாளப்படுகின்றன.

கோபித்தான் சினந்தான்

வெகுண்டான்

என்பனவற்றுள், வெகுண்டான் என்பது அதிகமான கோபத்தையும், கோபித்தான் என்பது மிதமான கோபத்தையும், சினந்தான் என்பது இடைப்பட்ட நிலையையும் உணர்த்துதல் தெளிவு. செற்றம் என்பது நெடுங்காலம் நிற்கும் கோபம். இதுபோலவே,

Calm

mild

Peaceful main

composed	chief	accurate
cool	leading	correct
still	principal	exact
quiet		

ஆகிய சொல் திரட்டுகளில் இடம்பெறும் சொற்களும் இடமறிந்தே மொழிபெயர்ப்பில் கையாளப்பட வேண்டும். ஏனென்றால் சில சொற்கள் ஒரு சூழலில் ஒரே மாதிரியான வழக்காறு பெறும். இன்னொரு சூழலில் அவை ஒரே மாதிரியான வழக்காறு பெறுவதில்லை. ஆங்கிலத்தில் start, begin என்பன போன்ற சொற்கள் இத்தகையவை.

Let us start the game என்றும் கூறலாம்.

Let us begin the game என்றும் கூறலாம்.

ஆனால் அதே சொற்களை இன்னொரு சூழலில் ஒரே பொருளில் பயன்படுத்த முடியாது.

Let us start the car என்று வரும். ஆனால்

Let us begin the car என்று வராது.

4.1.3. ஒரே பொருட்களத்தில் அமையும் சொற்கள்

ஒரு மொழியில் நெருக்கமான தொடர்புடைய பொருளைத் தரும் வேறு வேறு சொற்களும் உண்டு. இவை வழங்குமிடங்கள் வேறுபடும். ஆனால் இவை ஒரு பொருட்பொதுமைக்குள் அடங்குவன. இத்தகைய சொற்களை ஒரே பொருட்களத்தில் அமையும் சொற்கள் (words in the same semantic field) என்பர்.

ஆங்கிலத்தில் crawl, creep, loiter, saunter, slink, straggle, waddle போன்ற சொற்கள் ஒரே பொருட்களத்தில் அமைந்தவை. இவற்றின் பொருள் வருமாறு :

crawl	-	move slowly
creep	-	move slowly and stealthily
loiter	-	linger, walk slowly and idly
saunter	-	ramble, walk about leisurely.
slink	-	walk away stealthily

straggle - wander from the main land.

waddle - take short steps and move.

இவை அனைத்தும slow movement என்ற பொதுப் பொருளுள் அடங்கும்.

தமிழில் பேசு, உளறு, கத்து, முணுமுணு, பிதற்று, அரற்று, கிசுகிசு என்னும் சொற்கள் ஒரே பொருட்களத்தில் அமைந்தவை. இவற்றின் பொருள் வருமாறு :

பேசு – தன் கருத்தைக் கூறுதல்

உளறு – தன் கருத்தைக் கூறும்போது, சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் கூறுதல்.

கத்து – உரக்கக் கூவிப் பேசுதல், அழைத்தல்

முணுமுணு – தனக்குத்தானே மிக மெல்லிய ஒலியில் உதட்டை மட்டுமசைத்துப் பேசிக் கொள்ளுதல் : இது பெரும்பாலும் ஒரு முறையீடாக (complaining) இருக்கும்.

பிதற்று – தன்னறிவு இல்லாத / குறைந்த நிலையில் பேசுவது

அரற்று – துன்பமிகுதியால் புலம்பி உரக்கப் பேசுதல்

கிசுகிசு – இரண்டு பேருக்கிடையே காதோடு காதாக மெல்லிய குரலில் மூன்றாம் மனிதருக்குக் கேட்காத வண்ணம் பேசிக் கொள்வது.

இவ்விரு சொற்றிரட்டுகளையும் (groups of words) படம் 1, படம் 2 தெளிவுபடுத்தும்.



படம் 1



படம் 2

படம் 1இலும், படம் 2இலும் உள்ள சொற்கள், அதாவது நுட்பமான பொருள் வேறுபாட்டை உணர்த்தும் சொற்கள் சிறப்புச் சொற்கள் (Specific terms) என்றும், நடுவட்டங்களில் உள்ள சொற்கள் அதாவது பொருள் பொதுமையை உணர்த்தும் சொற்கள் பொதுச் சொற்கள் (generic terms) என்றும் அழைக்கப் பெறும். ஒரு மொழிபெயர்ப்பாளன் மூலத்தில் இத்தகு சொற்களைக் காண நேரும்போது, அவற்றைச் சோதித்து அவற்றுடன் மிக நெருக்கமான பொருளுடைய பிற சொற்களிலிருந்து அவற்றை வேறுபடுத்தும் நுட்பமான வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு. அவற்றின் பொருளும் மரபும் மாறாமல் பெறும்மொழியில் தரவேண்டும்.

4.1.4 உணர்வுப் பொருள் (Connotative meaning)

தன்மதிப்பீட்டு வினா 5
உணர்வுப் பொருள் என்றால் என்ன?

சில சொற்களும், தொடர்களும் கேட்போர் உள்ளங்களில் அச்சம், வெறுப்பு, அருவருப்பு போன்ற உணர்வுகளை எழுப்பவல்லன. இது பெரும்பாலும் தாய்மொழியாளர்க்கே உரியது. சொற்கள் தமக்குரிய நேர் பொருளைச் சுட்டுவதைக் காட்டிலும் அச்சம், விருப்பு, வெறுப்பு போன்ற உணர்வுகளை ஊட்டுவதில் அதிகம் முனைப்பு காட்டினால், அச்சொற்களை உணர்வூட்டும் சொற்கள் என்கிறோம். அச்சொற்கள் தரும் பொருளை உணர்வுப் பொருள் என்கிறோம்.

ஒரு சொல்லோடு தொடர்புடைய அனுபவங்கள் அச்சம் மிகுந்தவையாகவோ, கசப்பு மிகுந்தவையாகவோ இருக்குமாயின் அத்தகு சொற்களைச் சமூகம் விலக்கி வைக்க முற்படுகிறது. இப்படி விலக்கப்படும் சொற்களை விலக்குச் சொற்கள் (verbal taboos) என்பர். நாம் குழந்தைகளை விளையாட்டிற்குக் கூட ஐயய்யோ என்று சொல்லவிடாமல் தடுக்கிறோம். ஐயய்யோ என்பது மிகுந்த துன்பத்தின் போதும், பேரிழப்பின் போதும் பயன்படுத்தப்படும் சொல். எனவே அந்தத் துன்பமானது அந்தச் சொல்லுக்கு ஏற்றப்பட்டு அந்தச் சொல்லே அவலத்தின் குறியீடாகிவிடுகிறது. ஐயய்யோ என்று சொன்னாலே ஏதாவது அவலம் நேர்ந்துவிடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தி விடுகிறது. எனவே தான் மக்கள் அந்தச் சொல்லையே ஒதுக்கி விடுகிறார்கள். அப்படியே சாவு பற்றிய மனிதனது அச்சம் செத்தான் என்ற சொல்லையே விலக்கி வைக்கிறது. அந்த இடத்தில் துஞ்சினார், நித்திரை அடைந்தார், இறைவனடி சேர்ந்தார், சிவலோக பதவியடைந்தார், வைகுண்ட பதவி அடைந்தார், அமரர் ஆனார் என்பன போன்ற தொடர்களைப் பயன்படுத்துகிறோம், சில பொருட்களை மருந்தாகப் பயன்படுத்தும் போது, அவற்றின் பெயரைச் சொல்வதில்லை. சொன்னால் மருந்தின் குணமாக்கும் ஆற்றல் போய்விடும் என்ற அச்சம்.